ஊழியன்

8

15-11-1935

N35.8.5
208733

039 கு 3

Regd. No. M. 2419



# மாத்வ மித்திரன்.

# THE MADWA MITRAN.

EDITOR

Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM

பௌர்ணமிதோறும் வெளிவரும்.



| | | |
|---|---|---|
| Vol. 8.<br>புஸ்தகம் 8. | யுவஸம்வத்ஸரம்<br>கார்த்திக மாஸம்.<br>(15—11—35 சுக்ரவாரம்.) | No. 5.<br>நெ. 5. |





| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 121 |
| 2. | ஸ்ரீவாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம் | 129 |
| 3. | ஸ்ரீமத்விஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்) | 133 |
| 4. | விதவாவிவாக கண்டனம் | 136 |
| 5. | அப்பைய தீக்ஷிதரின் அதிக்ஷேபனைகளுக்குக் கண்டனம் | 140 |
| 6. | சங்கரவிஜயவிலாஸம் (ஸ்ரீமான் H. சுப்புராவ் M. A.) | 144 |
| | ...து வர்ணத்தார்கள் | 146 |
| | ...ப்பாணுத்தர்கத பகவானை உபாஸிப்பதேன்? | 150 |
| | ...னைகள் | 152 |



...த பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய (செய்)கைகள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் கண்டோர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை பக்தர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், ச்லோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிரதி எமாறுகிறுக்க தப்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் ச்லோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் ச்லோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன ச்லோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

த்வைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்காசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்டில் அனுப்பப்படும். விலை 1 — தபாற்கூலி 0—6—0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.


ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹாயநம.

# மாத்வமித்திரன்

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्य जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்

இருபத்தி இரண்டாவது அத்தியாயம்.

(ஸ்ரீமத். வே. பாகவத ரங்காசாரியாரின் மொழி பெயர்ப்பு).

(முன் 96ம் பக்கம் தொடர்ச்சி).

பீமசேனர் நஹுஷன் செய்த ப்ரச்னங்களுக்கு சமாதானம் செய்வதில் திறமைவாய்ந்தவராயினும், வித்தையைக்கொண்டு ஜீவிப்பது பிராம்மணர்களுக்கே தர்மமாயில்லாதிருக்கையில் க்ஷத்திரியர்களுக்கு இது தர்மமாகாது என்று சொல்லவும் வேண்டுமோ என்று எண்ணி, இந்த காரணத்தால் தன்னை உயிர்ப்பித்துக்கொள்ள நஹுஷன் செய்த பிரசினைகளுக்கு பதில் சொல்லவில்லை. வித்தையைக்கொண்டு ஜீவிப்பது தர்மமாகாததால் பீமசேனர் ஞானவானாயிருப்பினும், நஹுஷராஜன் செய்த பிரசினைகளுக்கு சமாதானம் சொல்வதைக்கொண்டு தன்னை தப்பிவித்துக்கொள்வதை அபேக்ஷிக்கவில்லை. நஹுஷன் ஸமஸ்த ஜனங்களின் பலத்தாலும் பூர்ணனாயிருந்தும் பீமசேனர், எத்தனைப் பாடாயிருக்கும்பொழுதுங்கூட அவரை அசைக்கவும் முடியவில்லை. நஹுஷராஜனான அந்த மலைப்பாம்பு பீமசேனரைத் தன் சரீரத்தால் சுற்றிக்கொண்டேயிருந்தானேயல்லாது அவரை கடிக்கமுடியவில்லை. பீமசேனர் தன் தாயாரிடமும் சகோதரர்களிடமுமுள்ள வாஞ்சையால் சீக்கிரம் தன்னைவிடுவித்து

கொள்ள அபேக்ஷித்தாராயினும் அந்த நஹுஷராஜனிடமிருந்த எல்லா தேவசிரேஷ்டர்களின் தபஸ்ஸை கிரஹிப்பதற்காக தன்னை விடுவித்துக்கொள்ள எத்தனப்படவில்லை. ஸகோதரர் முதலானவர்களிடம் வாஞ்சையால் தான் அந்த இடத்தில் இருக்கலாகாதென்று பீமசேனர் அறிந்திருந்தும், இந்த மலைப்பாம்பு சிறிது காலத்திற்கெல்லாம் தானாகவே மூர்ச்சையை அடையப்போகிறதென்றும், பகவானுடைய ஆக்ஞையாலும், என் சரீரத்தின் பலத்தாலும், இந்த பாம்பு அதன் சரீரம் கட்டுவிட்டுப்போய், சோர்ந்து கீழே விழுந்தபின், நான் என் சகோதரர்கள் இருக்குமிடம் செல்லப்போகிறேன் என்றும், ஆலோசித்து பீமசேனர் தன் சுபாவத்தின்படி பகவத் த்யானம் செய்துகொண்டு நின்றார். தன்னை தப்புவித்துக்கொள்ளும் இச்சையின்பேரில் பகவத் த்யானம் செய்யவில்லை. இவ்வாறு மேலே சொன்னபடிக்குள்ள பிரம்மாவின் வார்த்தையாலும் பகவானுடைய ஆக்ஞையின்பேரிலும் அந்த நஹுஷ ராஜனிடத்திலுமிருந்த எல்லா உலகத்தின் தபஸ்ஸும் பலமும் அப்பொழுதே பீமசேனருக்கு வந்துவிட்டது. நஹுஷராஜனிடமிருந்த தவமும் பலமும் பீமசேனரிடம் நிரம்பியபின் நஹுஷராஜன் மெல்லமெல்ல கட்டு தளர்ந்து போய்விட ஆரம்பித்தான். பீமசேனர் காட்டுக்குப்போனபின் தர்மபுத்திரர் அசுபசூசகமான அபசகுனங்களைப்பார்த்து மனது சஞ்சலப்பட்டு, பீமசேனர் எங்கு சென்றாரென்று துரௌபதியைக்கேட்டார். பீமசேனர் வேட்டைக்குச் சென்றதாய் அவள் சொல்லக்கேட்டு பீமசேனரின் துடை வேகத்தின் காற்றால் இரு பக்கம் சாய்ந்திருந்த மரங்களைப் பார்த்துக்கொண்டே அதன் வழியாய் காட்டில் புகுந்தார். அங்கு மலைப்பாம்பால் சுற்றப்பட்டிருந்த பீமசேனரைப் பார்த்துவிட்டு அந்த பாம்பை நீ ஏன் என் தம்பியை சுற்றிக்கொண்டிருக்கிறாய் என்று கேட்டார். நஹுஷராஜன் சுற்றிக்கொண்டதற்கு எல்லா காரணத்தையும் தர்மபுத்திரர் கேட்டார். தம்பியிடமுள்ள சிநேகத்தால் நஹுஷராஜன் செய்த எல்லா பிரசினத்திற்கும் தர்மபுத்திரர் பதில் சொன்னார். அப்பொழுதே நஹுஷன் ஸ்வர்க்கலோகத்திற்கு சென்றான். தர்மபுத்திரருடைய வம்சத்து முன்னோரான நஹுஷராஜன் திவ்ய

208233



மான வஸ்திரங்கள் கர்ணகுண்டலங்கள் தரித்தவனாய் விமானத்தில் உட்கார்ந்துகொண்டு ஸ்வர்க்கலோகத்திற்குச் சென்றபின் பீமசேனருடன் தன் ஆசிரமத்திற்கு வந்தார். தர்மபுத்திரர் ஆசிரமத்தில் இந்த எல்லா சமாசாரங்களையும் சொன்னார். இந்த விருத்தாந்தத்தை எல்லாம் துரௌபதிதேவியும் பீமசேனரின் எல்லா தம்பிமார்களும் பீமசேனரிடம் மிக்க பக்திமான்களான எல்லா ரிஷி ச்ரேஷ்டர்களும் கேட்டு, பீமசேனர் ஓர் மலைப்பாம்பால் பிடிக்கப்பட நேரிட்டதே என்று வெட்கமடைந்தனர். அப்படியே பீமசேனரைப்பார்த்துச் சொன்னார்கள். பீமசேனா! நீ இம்மாதிரி துணிச்சலான காரியத்தைச் செய்தது சரியல்ல. உன்னை தப்புவித்துக்கொள்ள சக்தி இருந்தும் நீ அதற்கு ப்ராயத்தினம் செய்யவில்லை. ஆகையால் எங்கள் மனதில் மகத்தான துக்கத்தை விளைவித்தாய். இனி இவ்வாறு நீ செய்யலாகாது என்று எல்லோரும் சொல்லிக்கொண்டு சமீபம் வந்து பீமசேனரைத் தழுவிக்கொண்டனர். பிறகு சில நாட்களில் பாண்டவர்கள் ரிஷி ச்ரேஷ்டர்களுடன் சேர்ந்து கௌரவர்களின் தேசமாயுள்ள காம்யகம் என்னும் வனத்திற்கு வந்து சேர்ந்தனர். பிறகு அந்த வனத்திற்கு அமிதமான சக்தியுள்ள பகவானான ஸ்ரீகிருஷ்ணர் ஸத்யபாமையுடன் சேர்ந்து பாண்டவர்களின் சமீபம் வந்து சேர்ந்தார். அவர்களால் பூஜிக்கப்பட்டவராய் அந்த பாண்டவர்களுடன் பிறகு சிநேக நிமித்தமான பழைய கதைகளைப் பேசினார். ஸ்திரீ சிரேஷ்டர்களான துரௌபதியும் ஸத்யபாமையும் ஸந்தோஷத்துடன் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர். ஸர்வக்ஞளாயும் தோஷமற்றவளாயுமுள்ள ஸத்யபாமை துரௌபதியை பரீக்ஷிப்பதற்காக, துரௌபதியே! நீ ஐந்து பர்த்தாக்களை எப்படி உன் வசமாக்கிக்கொண்டிருக்கிறாய் என்று ப்ரச்னம் செய்யவும், துரௌபதி அந்த ஸத்யபாமை நிர்தோஷமான க்ஞானமுள்ளவள் என்று அறிந்து, ஜனங்களுக்கு கற்பிப்பதற்காக, அவளிடம் ஸ்திரீ ஜனங்கள் செய்யவேண்டிய தர்மங்கள் எல்லாவற்றையும் சொன்னாள். அந்த துரௌபதி, விளையாட்டிக்காக ஸத்யபாமை இவ்வாறு கேட்டாள் என்பதைத்தெரிந்துகொண்டு அந்த வார்த்தைக்கு அநுகூலமான வார்த்தைகளை ஸத்யபாமையை சந்தோ

ஷப்படுத்துவதற்காக இவ்வாறு பேசினாள். ஸ்ரீகிருஷ்ணர் பிறகு சில நாள் பாண்டவர்களிடம் வாசம் செய்துவிட்டு, பிறகு சத்ய பாமையுடன் கூடி பாண்டவர்களிடம் சொல்லிக்கொண்டு துவாரகைக்கு வந்துசேர்ந்தார்.

## ஜயத்ரதனின் பராஜயம்.

பிறகு பாண்டவர்கள் ஒரு சமயம் வேட்டைக்குப்போயிருக்கும்பொழுது, சிந்து தேசாதிபதியான ஜயத்ரதன் சேனைகளுடன் கோடிகாச்யனென்னும் அரசனுடன் கூடி பாண்டவர்களின் உத்தமமான ஆசிரமத்திற்கு வந்துசேர்ந்தான். அங்கு துரௌபதியைக் கண்டான். ஸால்வதேசத்திற்கு விவாகத்திற்காகவென்று புறப்பட்டுப்போகும் அந்த ஜயத்ரதன் துரௌபதியைப்பார்த்து காசி நகரத்தில் பிறந்த கோடிராஜன் என்னும் தன்சிநேகிதனை துரௌபதியிடம் அனுப்பி தன்னிடம் ஸங்கமத்திற்கு வரும்படிசொல்லியனுப்பினான். துரௌபதியால் நிராகரிக்கப்பட்ட அதிபாபியான ஜயத்ரதன், துரௌபதியின் கையைப் பிடித்தான். துரௌபதி கையை உதரவும் ஜயத்ரதன் சீக்கிரம் பூமியில் விழுந்தான். மூர்ச்சை தெளிந்து ப்ரக்ஞைவரவும் மீண்டும் வெட்கமில்லாமல் துரௌபதியைப் பிடிக்க வந்துசேர்ந்தான். பிறகு துரௌபதி தனக்கு ஸஹாயமாயுள்ளவர்கள் இல்லாததால், தௌம்யரைப்பார்த்து நீங்கள் அக்னி ஹோத்ராக்னியுடன் என் பின்னாடி வாருங்கள் என்று சொல்லிவிட்டு, ஹே! நீசனான ஜயத்ரதா! நீ ஸுகமாய்போகப்போவதில்லை. என்று ஜயத்ரதனிடம் சொல்லி, அவனுடைய ரதத்தில் சீக்கிரம் ஏறினாள். பாண்டவர்கள் அப்பொழுது அபசகுனங்களைப் பார்த்து வேகமாய் தங்கள் ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் துரௌபதியின் தாஸியுடைய வாக்யத்தால் எல்லா சமாசாரங்களையும் கேட்டு, சீக்கிரமே ஜயத்ரதனுடன் பின்னாடி சென்றார்கள். பீமசேனா! பீமசேனா! என்று கூக்குரல் போடும் தௌம்ய முனியையும், அவருக்கு முன்னாடி செல்லும் மகாபாபியான ஜயத்ரதனையும் பார்த்து பாண்டவர்கள் சிம்ஹம்போல் சப்தம் போட்டார்கள். அப்பொழுது துரௌபதி ஜயத்ரதனின்



ரதத்தை விட்டு கீழே இறங்கினாள். தௌம்யருடன் தன் ஆசிரமத்திற்கு புறப்பட்டுப்போனாள். பாண்டவர்கள் தம் சாமர்த்தியத்தால் ஜயத்ரதனின் சைனியத்தைக் கொன்றார்கள். முதன்முதலில் துரௌபதியை ஜயத்ரதனிடம் போகும்படி சொன்ன அந்த பாபியான கோடிகாச்யராஜனை அவனுடைய தலையை சேதனம் செய்து அவனை யமனிடம் ஒப்புவித்தார். அந்த கோடிகாச்யன் அந்தம்தமஸ்ஸுக்கு போய்ச் சேர்ந்தான். பீமசேனரும் அர்ஜுனனும் ஜயத்ரதனுடைய எல்லா சைனியங்களையும் சம்ஹாரம் செய்து, நகுல சகதேவனுடன் சேர்ந்த தர்மபுத்திரரை ஆசிரமத்திற்கு அனுப்பிவிட்டு, ஓட்டம்பிடித்த ஜயத்ரதனை பின்னாடியே துரத்தினார். அர்ஜுனன் ஜயத்ரதனை ரதமில்லாமல் செய்தான். பிறகு கால் நடையாய் ஓடின ஜயத்ரதனைப் பிடித்து, பீமசேனர் காலால் அறைந்து அதனால் மிகவும் சங்கடப்பட்டுக்கொண்டிருந்த ஜயத்ரதனைப் பிடித்து துரௌபதியின் காலில் கொண்டுவந்து போட்டார். தர்மபுத்திரர் அந்த ஜயத்ரதனை விடுவித்தார். நான் துரௌபதிக்கு தாஸன் என்று ஜயத்ரதன் சொன்னபிறகுதான், பீமசேனர் ஜயத்ரதனை விட்டார். ஸிந்து தேசாதிபதியான அந்த ஜயத்ரதன் வெட்கமடைந்து தலை குனிந்துகொண்டு பிறகு வனத்திற்குள் சென்றான். பாண்டவர்கள் மிகவும் சந்தோஷமடைந்து அந்த ஆசிரமத்தில் வாசம் செய்தார்கள்.

அப்பொழுது மார்க்கண்டேய மகாமுனி வந்து, பாண்டவர்களுக்கு தர்சனபாஷை, குஹ்ய பாஷை, ஸமாதி பாஷை ஆகிய பாஷைகளிலுள்ள ஆச்சரியகரமான அநேக கதைகளைச் சொன்னார். தர்சன பாஷை என்பது மூன்று வகை. லோக தர்சன பாஷை, பரதர்சன பாஷை, வைதிகதர்சன பாஷை என்று. தேவர்களும், ரிஷிகளும் லோகதர்சன பாஷையை அனுசரித்து, ஸ்ரீகிருஷ்ணர் அவருடைய தந்தையான வஸுதேவரை நமஸ்காரம் செய்ததாகவும், அர்ஜுனர் ஸ்ரீகிருஷ்ணருடைய சரீரத்தை கட்டாரென்றும் கதை சொல்லுகின்றனர். இந்த கதைகளில்; பிள்ளையாயிருப்பவன் அவனுடைய பிதாவை நமஸ்காரம் செய்ய வேண்டும், மிருதமான சரீரத்துக்கு அக்னிஸம்ஸ்காரம் செய்ய

208733

வேண்டும், ஸ்ரீகிருஷ்ணருடைய சரீரத்திற்கே அக்னி ஸம்ஸ்காரம் செய்யப்பட்டிருக்கிறதல்லவா, என்றிவ்வாறு படிப்பினையை கற்றுக்கொள்ளவேண்டுமே ஒழிய ஸ்ரீகிருஷ்ணராலேயே பூஜிக்கத் தகுந்தவர்கள் வஸுதேவாதிகள் இருக்கிறார்களென்றும், ஸ்ரீகிருஷ்ணருக்கு மரணமுண்டென்றும் அர்த்தம் நாம் எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளலாகாது. ஸமாதி பாஷையில் எல்லா அர்த்தங்களுமே ஸம்பூர்ணமாய் ஏற்றுக்கொள்ளத் தகுந்தது. ஸ்ரீவிஷ்ணுவின் மகாத்மியத்தைச் சொல்லும் கதைகள் ஸமாதிபாஷையிலுள்ளவைகள். சிவாதிகளுக்கு உத்தமத்வத்தைச் சொல்லும் பாகங்கள் பரதர்சன பாஷையிலுள்ளதாயாகும். அவைகளில் நாம் தெரிந்துகொள்ள வேண்டியதென்னவென்றால், இவ்வாறு ஓர் மதமிருக்கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டுமே ஒழிய அதன் அர்த்தத்தை அப்படியே எடுத்துக்கொள்ளக் கூடாது. வைதிக தர்சனபாஷை அப்படியே ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும். குஹ்ய பாஷையில் மேல்வாரியாய்த்தோன்றும் அர்த்தத்தைவிட்டு உள்ளே இருக்கும் அந்தரார்த்தத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். திருஷ்டாந்தமாவது, எச்சில் சிவனுடைய நிர்மால்யம், வாந்தியெடுத்தது, பிணத்தின் மீதுள்ள வஸ்திரம், காக்காய் அமேத்யத்திலுள்ள வஸ்து. ஆக இந்த ஐந்தும் பரிசுத்தம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு உள் அர்த்தம் வேறு உண்டு. எச்சில் என்றால் கன்றின் எச்சிலாயுள்ள பசுவின்பால் பகவானுடைய அபிஷேகத்திற்கு யோக்யமாய் பவித்ரமாய் ஆகிறது. சிவனுடைய நிர்மால்யமாவது கங்கையின் ஜலமாகும். அது பரிசுத்தமானது. வாந்தியெடுத்தது என்றால் தேனீக்கள் வாந்தி எடுத்தது தேன். அதுவும் மிக்க பரிசுத்தமான வஸ்து. பிணத்தின் மீதுள்ள வஸ்திரமாவது பட்டுப்பூச்சியைக் கொன்றபின் அந்த பிணத்தின் மீதுள்ள வஸ்திரம் பட்டு ஆகிறது. அதுவும் பரிசுத்தமானது. காக்கையின் விஷ்டை சேர்ந்தவைகள் ஆலமரம் அரசமரங்கள். அவைகள் பரிசுத்தமானவை. இவ்வாறு இந்த பாஷையை நிர்ணயம் செய்யவேண்டும். பீமசேனர் ஜயத்ரதனை அவனுடைய சிரஸ்ஸில் ஐந்து குடுமிவைத்து அனுப்பிவிடவும், அவன் பரமசிவனைக் குறித்து தவம் செய்து பாண்டவர்களை யுத்தத்தில் தடுக்கவேண்டுமென்று வரனைக்கேட்டான். பரமசிவன் அர்ஜுனனுடைய தவத்தால் சந்தோஷமடைந்திருந்ததால் அர்ஜுனனைத்தவிர இதர பாண்டவர்களை நீ தடுப்பாய் என்று வரனைக்கொடுத்தார்.



## துரியோதனாதிகளை விடுவித்தது.

பாண்டவர்கள் வனத்தில் வாசம் செய்யும்பொழுது, அரசனான துரியோதனன் பாண்டவர்களின் ராஜஸூயயாகத்திற்கு போட்டியாக பௌண்டரீகமென்னும் யாகத்தைச் செய்தான். அஸூயையின் பேரில் செய்யப்பட்டிருப்பினும் அந்த பௌண்டரீகயக்ஞம் ராஜஸூய யாகத்தின் பதினாறில் ஒரு பாகத்திற்குகூட அருகமாக ஆகவில்லை. துரியோதனின் கட்டளையின்பேரில் துச்சாசனன் பாண்டவர்களை அவமானம் செய்யும் உத்தேசத்துடன் பாண்டவர்களே! நீங்கள் யக்ஞத்திற்கு வாருங்கள் என்று அவர்களுக்கு தூதனை அனுப்பினான். அதற்கு பீமசேனர் நாம் வருவது யுத்த யக்ஞத்திற்குத் தான் என்று தூதனிடம் சொன்னார். சிலநாள் கழித்து கர்ணன் சகுனி இவர்களுடன் கூடிய துரியோதனாதிகள் துராலோசனைசெய்து பாண்டவர்களுக்கும் துரௌபதிக் தேவிக்கும் மகத்தான தங்கள் பாக்கியத்தைக் காட்டி அவர்களை அவமானப்படுத்துவதற்காக திவ்யமான அலங்காரமுள்ளவர்களாய், விசித்திரமான மாலைகள் வஸ்திரங்கள் இவைகளை தரித்தவர்களாய், தம் தம் பத்னிமார்களுடன் சேர்ந்து தங்கத்தாலும் ரத்னங்களாலும் விசித்ரமாயுள்ள ரதங்களாலும் மகத்தான யானைகளாலும் குதிரைகளாலும் சிப்பாய்களாலும் கூடியவர்களாய் பாண்டவர்கள் இருந்த அந்த த்வைத வனத்திற்கு சீக்கிரமே புறப்பட்டனர். பசுக்களைப் பார்க்கப்போவதாய் காரணம் சொல்லி பாண்டவர்களை அவமானம் செய்வதற்காக துரியோதனாதிகள் புறப்பட்டிருக்கின்றனர் என்று அறிந்து, இந்திரபகவான் துரியோதனாதிகளின் ஸாமர்த்தியத்தை நாசம் செய்யவேண்டுமென்ற இச்சைகொண்டு துரியோதனாதிகளின், பராக்கிரமத்தை பங்கம் செய்வதில் சாமர்த்தியமிருக்கும்படி ஓர் வரனை சித்ரசேனன் என்னும் கந்தர்வனுக்குக் கொடுத்து, துரியோதனாதிகளைக் கட்டிவிட்டுவா என்று அந்தசித்ரசேனனுக்கு ஆக்ஞையிட்டார். அந்த சித்திரஸேனன் அறுபதினாயிரம் கோடிக்கணக்குள்ள சேனாதிபதிகளான கந்தர்வ சிரேஷ்டர்களுடன் சேர்ந்து, துரியோ

தனன் எந்த குளத்தில் ஸ்நானம்செய்ய விரும்பினானோ அந்த குளத்திற்கே வந்து சேர்ந்தான். துரியோதனின் ஆக்ஞையின்பேரில் துரியோதனனின் தூதர்கள் கந்தர்வர்களைப்பார்த்து இவ்வாறு பேசினார்கள். ராஜசிரேஷ்டனான துரியோதனன் இந்த ஸரோவரத்தில் ஸ்நானம் செய்வதற்காக வரப்போகிறார். ஆகையால் நீங்கள் துரியோதனனுடைய கட்டளையை தலைமேல் வகித்து தீர்த்தமாயுள்ள இந்த குளத்தினின்றும் புறப்பட்டு போங்கள். என்றிவ்வாறு சொல்லப்பட்ட அந்த கந்தர்வர்கள் உறக்க சிரித்தனர். பிறகு துரியோதனனுடைய அந்த தூதர்களைப்பார்த்து பேசினர். மூவுலகத்திற்கும் அதிபதியான இந்திரபகவானின் ஆக்ஞையை நாம் மரியாதை செய்பவர்கள். மனுஷ்யர்களின் சக்ரவர்த்திகளின் கட்டளையுமே நாம் மரியாதை செய்யமாட்டோம். இப்படியிருக்க அல்ப சக்தியுள்ள துரியோதனனுடைய ஆக்ஞையை நாம் லக்ஷியம் செய்யமாட்டோம் என்று சொல்லவும் வேண்டுமா என்ன, என்றிவ்வாறு கந்தர்வர்கள் சொல்லவும், துரியோதனன் கோபங்கொண்டு அந்த கந்தர்வ சிரேஷ்டர்களை பாண ஸமூகங்களால் அடித்தான். கர்ணனுடன் சேர்ந்த துரியோதனனுடைய தம்பிமார்கள் கந்தர்வர்களை அடித்தனர். கந்தர்வர்கள் துரியோதனனுடைய சைனியத்தைக் கொன்றனர். அப்பொழுது கந்தர்வர்களுக்கும் துரியோதனனுக்கும் ஓர் முகூர்த்த காலம் ஸமானமாய் யுத்தம் நடந்தது. பிறகு கந்தர்வர்கள் சத்ரு பட்டணத்தை நாசம் செய்யும் இந்திரபகவானின் வரத்தாலும் மாயாவித்தையாலும் கந்தர்வ சிரேஷ்டர்கள் விருத்தியடைந்தனர். பாண்டவர்களை உத்தேசித்து அந்த யுத்தத்தில் துரியோதனனுக்கு தேஜோபங்கம் செய்யவேண்டுமென்றுதான் சதுர்முகனும் மகாவிஷ்ணுவும் கந்தர்வர்களுக்கு இப்பேர்பட்ட பலத்தைத்தந்தார்கள். கந்தர்வர்கள் துரியோதனாதிகளின் சமீபம் வந்தார்கள். சித்ரசேனன் முதலில் கர்ணனுடன் யுத்தம் செய்தான். கர்ணன் அர்ஜுனனின்மீதுள்ள பொறுமையால் சித்ரசேனனுடன் யுத்தம் செய்ய நித்யமாயும் அபரிமிதமாயுமுள்ள ஷட்குணங்களைக்கொண்டவரான பரசுராமரின் வாக்யத்தால் கடைசிவரையில் முடியாமற்போய்விட்டது. பிறகு கர்ணன் சித்ரஸேனனால் அவனுடைய ரதத்தின் நாசம் அடைந்து பிறகு விகர்ணனுடைய ரதத்தில் உட்கார்ந்து அந்தரதத்தின் குதிரைகளை தானே ஓட்டிக்கொண்டு விகர்ணனுடன் சேர்ந்து வேகமாய் ஓடிப்போனான் பிறகு துரியோதனன் சித்ரஸேனனுடன் யுத்தம் செய்தான்.

(தொடரும்).



# ஸ்ரீ வாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் 74ம் பக்கம் தொடர்ச்சி.)

## ஸ்ரீத்ரிவிக்ரமரின் கோயிலைக் கட்டிவைத்தது.

ஸோதாபுரத்து அரசன் ஸ்ரீவாதிராஜரிடம் மிகுந்த அன்புடன் இருந்துவந்தான், முக்ய சிஷ்யனானான். ஒரு ஸமயம் ஸ்ரீவாதிராஜருடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது தன் நகரில் ஓர் உத்தமமான கோயில் இல்லையே என்று தனக்கு வருத்தம் இருப்பதை அறிவித்தான். உடனே ஸ்ரீவாதிராஜர் இதற்காக வருத்தப்படவேண்டாமென்றும் உத்தம க்ஷேத்திரத்திலிருந்து பகவன்மூர்த்தியை தான் வரவழைத்துக் கொடுக்கமுடியுமென்றும், ஆனால் கோயில்மட்டில் விஸ்தாரமாய் கட்டப்படவேண்டுமென்றும் சொல்ல, அரசன் மிகவும் சந்தோஷப்பட்டான். அவ்வாறு கோயில்கட்ட பெரிய ஏற்பாடுகளைச் செய்தான். ஆயிரக்கணக்கான வேலையாட்களை வேலைசெய்யச்செய்தான். கருங்கல் கட்டிடமாக வேலை நடந்துவந்தது. அச்சமயம் மண்டபத்தின்மீது கொண்டுபோகப்பட்டிருந்த ஓர்பிரம்மாண்டமானபாறுங்கல் தன் இடத்திலிருந்து தவறி கீழே விழும்படி நகர்ந்துவிட்டது. அது கீழே விழுந்துவிடும் பக்ஷத்தில் அடியில் வேலைசெய்துகொண்டிருந்த நூற்றுக்கணக்கான ஆட்கள் மடிவார்கள். அச்சமயம் எல்லோரும் இந்த சந்தர்ப்பத்தைக்கண்டு நடுநடுங்கி விட்டார்கள். ஓவென்றலறிக்கொண்டு பயந்துபோய் ஸ்ரீவாதிராஜரிடம் பக்திகொண்டு, ஸ்ரீவாதிராஜரின் ஆணையிருக்கிறது கீழே விழாதே என்றுசப்தம் போட்டார்கள். கீழே விழ பாதிதூரம் நகர்ந்திருந்த அந்த பிரம்மாண்டமான கல், அப்படியே நின்றுவிட்டது. இந்த விருத்தாந்தத்தைக் கேட்டு ஸ்ரீவாதிராஜர் அந்த இடத்திற்கு வந்து எல்லோரும் பார்த்திருக்கையிலேயே, அவர் அந்த மண்டபத்தின் மீது ஏறி அந்த பிரம்மாண்டமான கல்லை தான் ஒருவரே தன் கையால் நகர்த்திச் சரியான இடத்தில் ஸ்தாபனம் செய்தார். இதைக் கண்டு எல்லோரும் மகா ஆச்சரியமடைந்தார்கள். இவ்வாறு அந்த கோயில் வேலை நடக்கும்பொழுது அநேக ஆச்சரிய காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஒரு சமயம் ஓர் கல்தச்சன் தனது இஷ்டப்படி ஓர் பெருங்கல்லை உடைக்கமுடியாமல் சில நாட்களாக கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில், ஸ்ரீவாதிராஜர் இதைக்கேட்டு அவன் எந்த இடத்தில் உடைக்கவேண்டுமென்று நினைத்திருந்தானோ, அந்த பாகத்தில்தன்

கால்கட்டைவிரலைவைத்து மிதித்தவுடன், கல் இரண்டுபாகமாய் உடைந்தது. ஓர் பெருங்கல்லை இழுக்க எல்லோரும் சிரமப்பட்டுக்கொண்டிரும் கையில் ஸ்ரீவாதிராஜர் அவர்களுடன் தன் கையால் இழுக்கவுக் அந்தக் கல் வெகு வேகமாய் இழுக்கப்பட்டுவிட்டது. இவ்வாறு அநேக அற்புத காரியங்களுடன் ஸ்ரீவாதிராஜர் தன் மகா மகிமையை விளக்கிக் காட்டிக்கொண்டு அந்த தேவாலயம் கட்டிமுடிந்தவுடன், அரசன் ஸ்ரீ வாதிராஜரிடம், 'பகவன்! தங்கள் ஆக்ஞைப்படி கோயில்வேலைமுடிந்தது. இதில் எந்த பகவன்மூர்த்தி ஸ்தாபிக்கப்படுகிறார் என்பது தெரியவில்லையே! தங்கள் சித்தம் எது என்பதை அறிவிக்கக்கேட்டுக்கொள்கிறேன்' என்று சொல்லவும், ஸ்ரீவாதிராஜர் பாதகண்டத்து க்ஷேத்திரங்களில் ஸர்வோத்தம க்ஷேத்திரயாகவுள்ள பதரி க்ஷேத்திரத்திலிருந்து அங்குள்ள ஓர் பகவன்மூர்த்தியைக் கொண்டுவரச் செய்கிறேனென்று சொல்லி, தனக்கு கைங்கரியம் செய்துகொண்டிருந்த பூதராஜனைப் பார்த்து, 'பூதராஜனே! இந்த அழகிய கோவிலில் தேவப்ரதிஷ்டை நடக்கவேண்டியிருக்கிறது. முகூர்த்தமும் வைத்தாய்விட்டது, பதரி க்ஷேத்திரத்தின் சமீபத்தில் ரதாரூடரான ஸ்ரீத்ரிவிக்ரமமூர்த்தி விக்ரஹம் இருந்துவருகிறது. அந்த ரதத்துடனே அந்த பகவானை நீர் இவ்வூருக்கு கொண்டுவந்து விடவேண்டும். இந்த முகூர்த்தத்தில் தவறாமல் தேவப்ரதிஷ்டை நடந்துவிடவேண்டும்' என்றுசொல்ல, விசித்ரபராக்கிரமமுள்ள அந்த பூதராஜன், அவ்வாறே அங்குசென்று அந்த த்ரிவிக்ரமமூர்த்தியையும் அவர் ஏறியிருக்கும்ரதத்தையும் அப்படியே பூமியினின்றும்பெயர்த்து வெகுவேகமாய் ஸோதாபுரம் வந்து கொண்டிருந்தார். வரும் வழியில் ஓர் ராக்ஷஸன் எதிர்த்துவந்து பூதராஜனுடன் சண்டைக்கு வந்துசேர, பூதராஜன் தேவப்ரதிஷ்டா முகூர்த்தம் எங்கே தவறிப்போகுமோவென்றுபயந்து, அந்த ரதத்திலுள்ள ஓர் சக்கரத்தையேசுழற்றி அதனால் அந்த ராக்ஷஸனை அவலீலமாய் ஸம்ஹாரம்செய்துவிட்டு வேகமாய் குறித்த முகூர்த்தத்தில் ஸோதாபுரம் வந்துசேர்ந்தார். குறித்த முகூர்த்தத்திலேயே ஸ்ரீவாதிராஜர் அந்த கோயிலில் ஸ்ரீத்ரிவிக்ரமமூர்த்தியை பிரதிஷ்டை செய்தார். இது சம்பந்தமாய் கோயிலிலேயே சிலாசாசனம் இருந்துவருவதாய்த் தெரியவருகிறது. ஸ்ரீவாதிராஜர் மற்றொரு க்ஷேத்திரத்திலிருந்துமகாலட்சுமிமூர்த்தியையும் வரவழைத்து ப்ரதிஷ்டைசெய்தார். அந்த கோயிலில் தவளகங்கை என்னும் ஓர் குளத்தையும் நிர்மாணம் செய்வித்தார். அந்த ராஜாவும் அந்த கோயில் பூஜையும் பகவானுக்கு அநேக உற்சவங்கள் ரதோற்சவம் முதலியவைகளும் நடத்தப்படுவதற்கு போதுமானதாய் விசேஷ சொத்துக்களை கோயிலுக்குக் கொடுத்



தான். ஸ்ரீமத்வாசாரியார் எவ்வாறு உடுபியில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை ஸ்தாபித்து பூஜாதிகள் செவ்வனே நடந்துவரும்படி செய்தாரோ, அவ்வாறே ஸ்ரீவாதிராஜரும் தம் ஸோதாபுரத்தில் ஸ்ரீத்ரிவிக்ரமமூர்த்தியை ஸ்தாபித்து பூஜாதிகள் விச்சித்தியமன்னியில நடைபெறும்படி செய்தார்.

## சாபம் பெற்றது.

ஸ்ரீவாதிராஜர் சஞ்சாரம் செய்துவரும்பொழுது ஓர் பெரிய அரண்யத்திலுள்ள ஒத்தடிப்பாதையில் ஸ்ரீவிஜயீந்திர ஸ்வாமிகளை சந்திக்க நேரிட்டது. ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகளுடன் இவர் ஸ்ரீவியாஸராஜஸ்வாமிகளிடம் சேர்ந்துபடித்திருந்தாராதலால் இவர்களில் அதிகமான அன்பு ஏற்பட்டிருந்தது, இவ்விருவர்களும் அபரோக்ஷ ஞானிகள். பகவானை விசேஷாகாரமாய் பூஜித்து பகவத் அனுக்ரஹத்தைப் பெற்றவர்கள். மகா பண்டிதர்கள். ஸ்ரீமத்வ கிரந்தங்களை பாடப்ரவசனம் சொல்லி துஷ்டவாதிகளை நிக்ரஹிப்பதில் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவர்கள். தெய்வச்செயலாய் இவர்கள் ஒருவருக்கொருவர் தம் தம் வித்யாசாமர்த்தியத்தில் போட்டி போட்டுக்கொள்ளும்படி ஏற்பட்டது. அதாவது ஸ்ரீவாதிராஜர் ஸ்ரீ ஹயக்ரீவமூர்த்தியை ப்ரதி தினம் உபாசித்து அந்த பகவத் அனுக்ரஹத்தால் மகாகவீச்வரராய் விளங்கியிருந்தார். கங்கா ப்ரவாஹம்போல் தங்குதடையின்றி ஸ்ரீவாதிராஜரின் வதனத்தினின்றும் அற்புதமான ப்ராஸங்களுள்ள இனிய ஸம்ஸ்கிருத சுலோகங்கள் கிளம்பி வந்தன. மேலும் அவர் இயற்றிய ருக்மணீச விஜயமென்னும் காவியம் மிக்க ப்ரக்யாதியடைந்திருந்தது. இதைக் கேட்டிருந்த ஸ்ரீவிஜயீந்திர ஸ்வாமிகள் ஸ்ரீ வாதிராஜரிடம் தம்முடைய இணையற்ற வித்யாஸாமர்த்தியத்தைக்காட்டி அவருடைய புகழ்ச்சியைப்பெற விருப்பமடைந்தார். ஆகையால் ஸ்ரீ விஜயீந்திரர் தன் எதிரில் வந்த ஸ்ரீவாதிராஜரைப் பார்த்து, கவீச்வரரே! இந்த அரண்ய சம்பந்தமாய் நீர் சுலோகங்களை கவனம்செய்து சொல்லும். நானும் கவனம் செய்கிறேன். நீர் ப்ராஸபத்தமாய் கவனம் செய்வதில் மகா ப்ரக்யாதராய் இருக்கிறீர். நானும் அவ்வாறே செய்து பார்க்கிறேன். யாருடைய கவிதையில் அதிகப்ராஸங்கள் காணப்படுகிறதோ அவர் உத்தமரென்று நிச்சயம் செய்து அவருடைய பல்லக்கு முந்திபோக இதரன் வழிவிடவேண்டுமென்று ஒப்பந்தத்தைச் செய்துகொள்வோம் என்றறிவித்தார். அதற்கு ஸ்ரீ வாதிராஜர் சிரித்துக்கொண்டு, யோகீச்வரரான ஸ்ரீவிஜயீந்திரரே! அப்படியே தங்கள் இச்சைப்படி செய்வோம். ஆனால் இந்த வனத்தின் பர்ணசாலையை இவ்வளவு [illegible] செய்து

கொள்ளவேண்டியதவசியமாகும். ஆதலால் நாமிருவரும் ஓரே சுலோகத்தைத்தான் இயற்றுவோம். அதில் முன் பாதியை நான் இயற்றுகிறேன். நீர் அதன்படி பிற்பாதியை இயற்றிவிட்டால் அதுவேபோதும். நானே உம்மை உத்தமகவி என்று ஏற்றுக்கொண்டு, உங்கள் பல்லக்கு முந்திபோக இடம்தருகிறேன். இதுஉங்களுக்கு சம்மதமா என்றுகேட்க ஸ்ரீவிஜயீந்திரர் சிறித்துக்கொண்டு கவீசுவரரான ஸ்ரீவாதிராஜரே! தாமே எவ்வளவு ப்ராசங்கள் போடமுடியுமோ அவ்வளவு ப்ராசங்களுடனுள்ள ஓர் பாதிசுலோகத்தை முந்தி இயற்றித்தாரும். பிறகு நான் அவ்வாறு செய்து பார்க்கிறேன் என்று ஒப்புக்கொண்டார். அப்பொழுது ஸ்ரீ வாதிராஜர் "அரண்யம் தத்தாண்யங்க்ரி ஸரண்யந்தர்திபாதம்" என்று சொன்னார். ஸ்ரீவிஜயீந்திரர் உடனே சிறிதும் தவக்கமன்னியில் 'ஜரீதத்த பரீரம்ப தரீஸூப்தஸரீஸிருபம்' என்றார். தரணியாகிய சூரியனுடைய கிரணமார்க்கத்தில் மறைந்திருக்கும் விருக்ஷங்களுடன் கூடியது அரண்யமாகுமென்று அர்த்தம்கொண்டு, அரண்ய, தாண்ய, ஸரண்ய என்னும் மூன்று ப்ராஸங்தள் இருக்கும்படி ஸ்ரீவாதிராஜர் பாதி சுலோகத்தை ரசனம் செய்தார், ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகளோ, மலையருவியால் தழுவப்பட்டிருக்கும் குஹையில் படுத்துக்கிடக்கும் பல பர்ம்புகளுடனுள்ளது வனம் என்று பொருளைக்கொண்டு, ஜரீ, பரீ, தரீ, ஸரீ, என்னும் நான்கு ப்ராஸங்கள் இருக்கும்படி பாக்கி அர்த்த சுலோகத்தை ரசனம் செய்து அந்த சுலோகத்தை பூர்த்திசெய்து, ஸ்ரீவாதிராஜரே! நான் எந்த தெய்வோபாஸனையுமன்னியில் கேவலம் என் வித்யா ஸாமர்த்தியத்தால் தான் இவ்வாறு கவிதை செய்யும்படியான சக்தியைப் பெற்றிருக்கிறேன், நீங்கள் உங்கள் பாதி சுலோகத்தின்படி என் பாதிசுலோகத்தில் மூன்று ப்ராஸங்கள் இருந்தால் போதுமென்று அபிப்பிராயப்பட்டீர். நான் அதைவிட அதிகமாகவே நான்கு ப்ராஸங்களுள்ளதாக கவனம் செய்துவிட்டேன். ஆகவே எங்கள் ஒப்பந்தத்தின்படி நீர் தோற்றுப் போய்விட்டதால் என் பல்லக்கு முன்னடி செல்ல நீர்தான் மார்க்கத்தைத் தரவேண்டுமென்று சொல்ல, ஸ்ரீவாதிராஜர், மனதில் ஸ்ரீவிஜயீந்திரரின் மகா சாமர்த்தியத்தைப்பற்றி சந்தோஷப்பட்டு, அவரை சிலாகித்துவிட்டு, எங்களிருவர்களின் இந்த சந்திப்பு எப்பொழுதும் ஞாபகத்திலிருக்கும்படி செய்யவேண்டியதவசியமென்று தோன்றுகிறது. பகவத் ஸங்கல்பமும் அவ்வாறே இருக்குமென்றே நம்புகிறேன். ஆகவே நான் இனி பேசப்போவதை நீங்கள் கவனமாய்க் கேட்கவேண்டும். நீங்களோ அவ்வாறில்லாமல் நான் எந்த தெய்வ உபாஸனையாலும், கவிதாசாமர்த்தியத்தை அடையவில்லை. நான் இயற்கையாகவே இந்த சக்தியைப்பெற்றிருக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறீர். அப்பைய்ய தீக்ஷிதர் செய்த ஒவ்வொரு கிரந்தத்தையும் கண்டித்து ஒவ்வொரு கிரந்தமாக இதுவரை நீங்கள் 104 கிரந்தங்களை இயற்றியிருக்கிறீர். இந்த கிரந்தங்கள் பிரசாரம் அடையஅடைய உங்கள் கர்வம் விருத்தியாகுமாதலால் உங்கள் கிரந்தம் பிரசாரமடையாமற்போகட்டுமென்று நான் சாபமிடுகிறேன் என்று சிறித்துக்கொண்டு சொன்னார். (தொடரும்).



ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீமத்வ விஜயம்.

---

## ஆறாவது ஸர்க்கம்.

(முன் 104-ம் பக்கம் தொடர்ச்சி).

(45) இந்த பதரியில் 40 நாட்கள் இவ்வாறு விரதங்கள் பூண்டு தன் சரண பக்தி செய்துவரும் ஸ்ரீமத்வாசாரியாரை குருவான ஸ்ரீவேதவியாஸர் மனுஷ்யர்கள் வரக்கூடாமலிருப்பதாய் தான் ப்ரத்யக்ஷமாயிருந்துவரும் பெரிய பதரிகாசிரமம் வந்துசேர, இதரர்கள் வந்தழைத்தவர் இன்னாரென்று அறியக் கூடாதபடி ஓரே தேஜ: புஞ்ஜராய் வந்து அழைத்துச் சென்றார். (46) அன்றிரவே ஸ்ரீவேதவியாஸர் இவ்வாறுசொல்லி புறப்பட்டுப் போகவும், மறுநாள்காலை சூரியன் உதயமானவுடன் சிஷ்யர்களுக்கு ஹிதோபதேசம் செய்வதில் ஈடுபட்டு அவர்களிடம் கருணை கொண்டு மௌன விரதம் பூண்ட மேலான நோக்கமுள்ள அந்த ஸ்ரீமத்வாசாரியார் இவ்வாறு எழுதித்தந்தார். (47) இந்த பதரி க்ஷேத்திரத்திற்கு ஸமானமாயுள்ள ஸமஸ்த பாபங்களையும் பரிகரிக்கும் க்ஷேத்திரம் எங்குமில்லை. இந்த கங்காதீர்த்தத்திற்கு ஸமானமான தீர்த்தம் எங்குமில்லை. விஷ்ணுவுக்கு ஸமானமான தெய்வம் எங்குமேயில்லை. எமது வார்த்தைக்கு ஸமானமான ஹிதோபதேசமும் இஷ்டத்தைத் தருவதுமான வார்த்தை இல்லவே இல்லை. (48) ஸ்ரீவேதவியாஸரூபியான பகவானைப் பார்ப்பதற்காக அடியேன் போகப்போகிறேன். மறுபடியும் அடியேன் இங்கு திரும்பி வருவேனோ வரமாட்டேனோவென்பதை நான் அறியேன். அந்த ஸ்ரீ வேதவியாஸர்தான் இந்த முடிவை அறிவார். அடியேனிடம் அன்புகொண்டிருக்கும் சிஷ்யர்களே! உங்களுக்கு க்ஷேமமுண்டாகட்டும் என்று எழுதிவிட்டு பெரிய பதரிக்குச்செல்ல, ஹிமவத்கிரியின்மீது புறப்பட்டுவிட்டார். (49) நாதா! நாதா! எங்கள் அதிபதியே! ஸம்ரக்ஷகரில்லாமல் அநாதர்களாயுள்ள எங்களை ஜன நடமாட்டமில்லாத இந்த தூர தேசத்தில் தனியே விட்டுவிடலாகாது. தாங்கள் எங்களிடம்

மேலான கருணைகொண்டவரல்லவா! தாங்கள் ஒருக்காலும் செல்லலாகாது என்று சிஷ்யர்கள் எல்லோரும் ஒருங்கே சேர்ந்து சொல்ல, மனதில் யோசனை செய்துகொண்டார்களாயினும், இந்த வார்த்தையைக் கேட்டு, சிஷ்யர்களிடம் மிக்க தயையுள்ள ஸ்ரீமத்வாசாரியார், ஸ்ரீவேதவியாஸரைப் பார்க்கப்போகும் தன் பிரயாணத்தை நிறுத்தி, அதனால் அவருடைய இஷ்டம் பூர்த்தியாகாமல் போய்விடுமோ என்று பயந்து அந்த சிஷ்யர்கள் தாங்கள் மனதால் எண்ணியதை வெளியில் அவரிடம் சொல்லவில்லை. (50) ஸத்குருவான ஸ்ரீமத்வாசாரியாரின் பிரிவைத்தாளாமல் ஸ்ரீஸத்யதீர்த்தர் என்ற ஸன்யாஸியார் மட்டில் ஸ்ரீமத்வாசாரியாரைப் பின்தொடர்ந்துசென்றார். அவர் ஸ்ரீமத்வாசாரியாரிடமிருந்து ஐதரேய உபநிஷத்தின் தாத்பரியத்தை ஒன்றுக்கு மூன்று தடவை சிரவணம் செய்து, அவருடைய மகாமாகாத்மியத்தை அறிந்து அவரிடம் மிக்க அன்புகொண்டிருந்தார். (51) ஹிமவத்கிரியின்மீது இதரர்களால் ஸுலபமாய் கடக்க முடியாததான தூர்க்க மார்க்கத்தில் ஸ்ரீமத்வாசாரியாரின் பின் வேகமாய் தொடர்ந்து ஓடிப்போயும், சூரியன் அஸ்தமனமடைந்த பிறகு அவர் களைப்பாற இடமில்லாமலும், வெகுதூரம் விட்டுவிட்டிருப்பதுமான பாறைகளில் விளையாட்டாக அதிவேகமாய் பறந்தோடிக்கொண்டிருந்த ஸ்ரீமத்வாசாரியாரை பின்னடைய முடியாமலும் போய்விட்டார். (52) ஸ்ரீஸத்யதீர்த்தர் மனதில்பீதியடையவும் ஸ்ரீமத்வாசாரியார் சிறிது திரும்பிப்பார்த்து, திரும்பிச்செல்லும்படி கையை அசைக்கவும், அந்தகாற்றால் கொண்டுபோகப்பட்டவராய் ஸ்ரீஸத்யதீர்த்தர் அன்று பகல்முழுவதும் கடந்தமார்க்கத்தை எல்லாம் இரண்டு நாழிகைக்குள் கடந்து திரும்ப பதரிகாசிரமம் வந்து சேர்ந்தார். (53) அங்கு அநந்த மடத்தில் தன்னுடன் கூடவந்திருந்த இதர சிஷ்யர்களைப்பார்த்து, ஆசாரியாள் தன்னிடம் செய்த பரமானுக்கிரகத்தால் தான் இரண்டு நாழிகைக்குள் ஒருநாள் மார்க்கத்தைக்கடக்க முடிந்ததைச்சொல்லி வெகுதூரம் இடைவெளிகளிலுள்ள பாறைகளின்மீது அதி ஆச்சரியகரமாய் அவர் தாவிச் செல்வதையும் சொல்லிச் சொல்லி, ஸ்ரீ ஆசாரியாளை இதர சிஷ்யர்களுடன் சேர்ந்து எப்பொழுதும் ஸ்மரித்திருந்தார்.



(54) லங்காநகரம் ஸமுத்திரத்தைத் தாண்டும்பொழுதிருந்த வானரச்ரேஷ்டரான ஹனுமார்போலும், ஸௌகந்திகவனம் செல்லும்பொழுது இருந்த அஸுரர்களுக்கு பயங்கரரான பீமசேனர்போலும் ஸமஸ்த பாபங்களைப்போக்கும் திருநாமமுடைய ஸ்ரீமத்வாசாரியார் பெரியபதரிகாசிரமம் போகும்வழியில் பர்வதோத்தமமான இமயமலையின் கொடிமுடியில் பிரகாசித்தார். (55) இணையற்றதான பலிஷ்டவிருஷபம்போல் பராக்கிரமம் படைத்தவராய் மலர்ந்த கண்களுள்ளவராய் சிறிதும் பயமில்லாதவரான ஸ்ரீமத்வாசாரியார், சிங்கம் வேங்கை புலி கரடி முதலிய அநேக பிராணிசமூகங்களை சம்ரக்ஷித்து வருவதாயும், கருடன் முதலான பலவகை பக்ஷிகளுடன் கூடியதும் மகா கடூரமான விஷத்தை வாயாலும் கண்ணாலும் புகை ரூபமாயும் கூட கக்கும் பெரும் பாம்புகளுடன் கூடியதுமான ஹிமவத்கிரியை பார்வையிட்டார். (56–57) அப்பொழுது ஆனந்த தீர்த்தரான ஸ்ரீமத்வாசாரியார் நன்றாய் மலர்ந்திருக்கும் கமல புஷ்பங்களைக்கொண்டதான ஸரோவரங்களால் சூழப்பட்டிருப்பதும், புண்ணியம் செய்தஜனங்கள் ஸுகானுபவம் செய்வதற்காக அபரிமிதமாயுள்ள சிருங்காராதி போகங்களுக்கு ஸாதனங்களாயுள்ளவைகளின் இருப்பிடமாயுள்ளதும், மலர்ந்த புஷ்பஸமூகங்களுடனுள்ள விருக்ஷங்களைக்கொண்டதும், உன்னதமான மரகதமாணிக்கங்களே ஸ்வரூபமாயுள்ள உத்தமமான தரையின் சோலையுள்ளதும், அடிவார மலைகளில் நமஸ்காராதி புண்ணிய ஸாதனங்களைச்செய்யும் மகா ரிஷீசுவரர்களின் கூட்டத்தைக்கொண்டதும், தங்கமயமான கொடுமுடியால் பிரகாசிக்கும் ஆகாயமுள்ளதும், சிகப்பு முத்துப்பவழம் கோமேதகம் முதலான ரத்தின ஸமூகங்களைக்கொண்டதும், தங்கமயமான உத்தம கடகங்கள்உள்ளதும், அழகிய வள வரிசைகளால் பிரகாசிப்பதும் மனோகரமானதும் மனதிற்கு ஆனந்தத்தைத்தரும்வடிவுள்ளதான அந்த இமயமலையைப்பார்த்து இந்த மலைபோலவே, அழகிய புன்சிரிப்புள்ள மகாலட்சுமியின் கையால் அணைக்கப்பட்டிருப்பவராய், ஸமஸ்தப்ராணிகளின் ஹிதத்திற்காக ஆதிசேஷனின் சரீரத்தை படுக்கையாய்க் கொண்டவராய், ஸந்தோஷமான தேவர்களின் கூட்டத்தில் நிற்பவராய், ஸர்வோத்தமராய், மரகத

மாணிக்கமான தரைபோல் உத்தமமான ச்யாமளவர்ணராய் தன் காலடியில் நமஸ்கரிக்கும் மகா ஞானிகளான தேவாதிகளைக் கொண்டவராய், தங்கம்போல் பிரகாசிக்கும் பீதாம்பரம் உடுத்தவராய் ஜொலிக்கும் பத்மராகம் வைரம் முதலான நவரத்னங்களின் சமூகங்களைக்கொண்ட ஆபரணங்கள் பூண்டவராய், ஸுவர்ணமயமான உத்தம காப்பு சங்கிலி முதலிய ஹஸ்தாபரணங்களால் பிரகாசிப்பவராய், அழகிய வனமாலையால் விளங்குகிறவராய், ஸாந்திரராய் நிர்தோஷமான ஸ்வரூபமுள்ளவராயுள்ள ஸ்ரீநாராயணனை மனதில் எண்ணிக்கொண்டார்.

ஸ்ரீகவிகுலதிலகரான
ஸ்ரீத்ரிவிக்ரமபண்டிதாசாரியரின் குமாரரான
ஸ்ரீநாராயணபண்டிதாசாரியார் இயற்றிய
ஸ்ரீமத்வவிஜயத்தில் ஆறாவது ஸர்க்கம் ஸம்பூர்ணம்.
ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

---

## விதவா விவாக கண்டனம்.

---

(முன் 51ம் பக்கம் தொடர்ச்சி.)

(10) ஸது யத்யன்யஜாதீய: பதித: க்லீப ஏவச|
விக்ரமஸ்த: ஸகோத்ரோவா தாஸோதீர்கமயோபிவா|
ஊடாபிதேயா ஸான்யஸ்மை ஸஹாவரண பூஷணா||

என்கிறார் காத்யாயனர். அவன் வேறு ஜாதியானாயிருந்தாலும் சரி பதிதனாய் இருந்தாலும் சரி. நபும்ஸகனாயிருந்தாலும் சரி. தகாத காரியங்களைச் செய்பவனாயிருந்தாலும் சரி, ஒரே கோத்திரக்காரனாயினும் சரி, அடிமையாயினும் சரி, அல்லது நீடித்த வியாதியுள்ளவனாயினும் சரி, அவன் விவாகம் நடந்தவளாயிருந்தாலும் வஸ்திரம் ஆபரணங்களோடு அன்னியனுக்குக் கொடுக்கப்படலாம், என்று இதன் பொருள். இந்த ஸ்மிருதிவாக்யம் தமக்கு விசேஷமான ஆதரவை அளிப்பதாய் அச்சபை மார்தட்டிக் கொள்கிறது. விதவா விவாகம் செய்யப்பட வேண்டுமென்று வற்புறுத்தும் இச்சபை விதவையையே பிரஸ்தாபம் செய்யாதிருக்கும் இந்த ஸ்மிருதியைக்கூறி என் ஆரவாரம் செய்யவேண்டும்? "விவாகமான ஸ்திரீயையும் ஸப்ரகாரமாய் சில திட்டங்களுக்குட்பட்டு அன்னியர்களுக்கு விவாகம்செய்து கொடுங்கள் என்று அனுமதிக்க



பட்டிருப்பதை கவனியுங்கள் என்று இச்சபை இந்த ஸ்மிருதியின் அடியில் குறிப்பு எழுதியிருக்கிறது. பதி இறந்துபோய் விதவையானவர்களுக்கு மட்டில் விவாகம் செய்விக்கவேண்டுமென்பது இச்சபையின் நோக்கமோ அல்லது ஈடற்றதோஷங்கொண்ட பதியை அடைந்து இல்லறவாழ்க்கையை நடத்தும் தம்பதிகளையும் பிரித்துவிட வேண்டுமென்பது கருத்தோ தெரியவில்லை. விதியில் சொல்லப்பட்டிருக்கிறபடி விவாகம் பூர்த்திசெய்துகொண்ட புருஷன், அவன் சிலதோஷங்களை அடையப்பெற்றான் என்ற காரணத்தால், அவன் ஜீவதசையிலேயே தன் பாரியையின் மீதுள்ள ஸ்வாதந்திரியத்தை இழந்துவிடவேண்டுமோ என்ன? இந்த ஸ்மிருதிக்கு இவ்வாறு அர்த்தம் செய்யும் பக்ஷத்தில் ஒரு புருஷனுக்கு காலாந்தரத்தில் வியாதியால் நபும்ஸகத்தன்மை ஏற்பட்டு விட்டால், அவனுடைய ஸம்ஸாரம் அவனை விட்டு வேறொருவனை மணக்கலாம் போலும்; அப்படியே நீரா வியாதி அவனுக்கு ஏற்பட்டு விட்டாலும் அவனை விட்டு விடலாமென்று ஸ்மிருதி அனுமதிப்பதாய் நிச்சயிக்க வேண்டும். ஓர் புருஷனை மணந்து சரியான யௌவன காலத்தில் சம்பூர்ணமான சுகம் பெற்று எல்லாவகை சௌகரியங்களையும் அடைந்து, இவன் தீர்க்க ரோகமடைந்தவுடன் இவனை விட்டுவிடச் சொல்லி மகா காருண்யமுள்ள மகரிஷிகள் பெண்களுக்கு புத்திமதியளிப்பார்களா என்பதை யோசியுங்கள். அப்படியானால் ஆயுள்முடிய சதிபதிகளாய் வாழ்பவர்கள் உலகிலேயே இல்லாமல் போவார்கள். ஆகையால் ஊடா என்னும் பதம் விவாகமானவளென்று அர்த்தமாயினும் விவாகம் பூர்த்தியாகாதவளென்னும் அர்த்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதென்று நன்கு விளங்குகிறது, மேலும் வாக்தானம் பெற்றவுடனேயே அந்த புருஷன் பதியாகும்பொழுது, இவளும் என் ஊடையாக ஆகமாட்டான். ஆதலால் ஊடை என்னும் பதம் இவ்விடத்தில் வாக்தானம் அடைந்தவளிடம் தான் உபயோகப் படுத்தப்பட்டிருப்பதாய் நிச்சயிக்கவேண்டியதாகும். வைதிக சார்வ பௌமரென்னும் பெரியாரும் தர்ச நிர்ணயமென்னும் நூலில் ஊடை என்னும் பதத்திற்கு வாக்தானம் பெற்றவளென்றே அர்த்தம் செய்திருக்கிறார். ஆதலால் விதவா விவாக வாதிகளுக்கு இந்த பிரமாணமும் கொஞ்சமேனும் ஆதரவு அளிப்பதில்லை. இனி இதற்கடுத்த பதினொன்றாவது ஸ்மிருதி பிரமாணத்தை கவனிப்போம்.

(11) அர்ஜுனஸ்யாத்மஜ: ஸ்ரீமான் இராவாந்நாம வீர்யவான்|
ஸுதாயாம் நாகராஜஸ்ய ஜாத: பார்த்தேன தீமதா||
ஐராவதேன ஸோதத்தா ஹ்யாபத்யா மகாத்மனா|
பத்யௌ ஹதே ஸுபர்ணேன கிருபணா தீனசேதனா||

"ஸ்ரீமான் இராவான் என்பவன் அர்ஜுனனுடைய குமாரன், வீரியமுள்ளவன். ஞானியான அர்ஜுனனால் பாம்பு ராஜாவின் பெண் வயிற்றில் பிறந்தவன். மகாத்மாவான ஐராவதனால் அவள் சந்தானமில்லாதவளாய் வாழ்க்கைப்பட்டாள் கருடனால் அவளுடைய புருஷன் கொல்லப்பட்டிருந்தானாதலால் அவள் மனம் நொந்து கருணைக்கு பாத்திரமானவளாய் இருந்தாள்". இவ்வசனங்கள் காத்யாயன ஸ்மிருதியிலிருப்பதாய் துண்டுப் பிரசுரத்தில் காணப்படுகிறது. இந்த சுலோகம் மகாபாரதம் பீஷ்ம பர்வதத்தில் 20 வது அத்யாயத்தில் காணப்படுகின்றன. ஆதலால் காத்யாயனர் மகாபாரதத்திலிருந்து இவ்வசனங்களை உதாஹரணம் செய்திருக்கக்கூடும். மேலே கண்ட 10 வது ஸ்மிருதி பிரமாணத்திற்கு இந்த வாக்யங்கள் திருஷ்டாந்தமென்று வெகு டம்பமாக இச்சபை குறிப்பில் சொல்லிக்கொள்கிறது. வாசகர்களே! பதியிழந்த ஓர் பாம்புஜாதிப் பெண்ணிடம் அர்ஜுனன் ஒரு குமாரனை உண்டாக்கியது தாம் வற்புறுத்தும் விதவா விவாகத்திற்கு முக்யமான திருஷ்டாந்தமென்று இச்சபை உத்தேசிப்பது ஆஸ்திகர்களை நகைக்கத்தான் செய்யும். ஏற்கனவே 7 வது சுருதிப் பிரமாணமாகிய 'யாபூர்வம் பதிம் ஹித்வா' வென்ற அதர்வண வேத மந்திரத்தை விசாரம் செய்யும்பொழுது ஸஜாதிய தர்மங்களைத்தான் பரிசீலனைசெய்து விவஸ்தை செய்வது யுக்தமென்றும் பின்ன ஜாதிகளின் தர்மங்கள் ஓர் விவஸ்தைக்குள்படாதென்றும் திருஷ்டாந்த பூர்வமாய் காட்டியிருக்கிறேன். மேற்கண்ட பீஷ்ம பர்வ வசனங்கள் இந்த இதிஹாஸத்தை பூர்ணமாய் விளங்கிக்காட்டுவதில்லையாயினும், ஆதி பர்வதத்தில் 234 வது அத்யாயத்தில் சொல்லியிருப்பதையும் சேர்த்து பரிசீலனை செய்தால் இவ்வாறு தெரியவருகிறது. தர்மபுத்திரரும் த்ரௌபதிதேவியும் தனித்திருப்பதைப்பார்த்ததால் நாரதரின் முன் செய்திருந்த சபதத்தின்படி ஒருவருஷம் பிரம்மசரியத்துடன் தீர்த்த யாத்திரைசெய்ய அர்ஜுனன் புறப்பட்டான். சில தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தபின் கங்காத்வாரத்தில் கங்கையில் ஸ்நானம் செய்து வெளிக்கிளம்ப புறப்படும்பொழுது தண்ணீருக்குள்ளிருந்த பாம்புராஜனின் குமாரி உலூபி என்பவள் அர்ஜுனனை தன் ஸர்ப லோகத்திற்கு இழுத்துச் சென்றாள். அவளை நீ யார் என்று அர்ஜுனன் பிரச்னம் செய்ய, தான் ஐராவத குலத்தில் பிறந்த இராவாவென்ற ஸர்பராஜனுடைய மகளென்றும் அர்ஜுனனுடைய திவ்ய ரூபத்தைக்கண்டு மோகித்து மன்மத பாணத்திற்கு இரையாகி இருப்பதாயும் உலூபி பதில் சொல்லி, தன் மன்மத பாதையை தீர்க்கும்படி பிரார்த்தித்தாள், பிரம்மசரியத்திற்கு ஹானி ஏற்படுமே



என்று பயத்தை நினைத்து அவளுடைய இச்சையை எப்படி பூர்த்திசெய்கிறதென்று அர்ஜுனன் யோசிக்கும்பொழுது, "ஸைசதர்ம ஏவஸையாத் அதத்வா ப்ராணான் மமார்ஜுன| பக்தாச பஜமாம் பார்த்த ஸதாமேதன் மதம் ப்ரபோ|| ந கரிஷ்யஸி சேதேவம் ம்ருதாம் மாமுபதாரய| ப்ராணதான் மகாபாஹோ சர தர்ம மனுத்தமம்||" என் இச்சையை பூர்த்தி செய்வது உமக்கு தர்மமே ஆகும். எனக்கு உயிரை தானம் செய்து உம்மிடம் ஈடுபட்டிருக்கும் என்னை நீங்கள் அடைவீர். இவ்வாறு செய்வதை, ப்ரபுவே! சாதுக்கள் ஆமோதிப்பார்கள்தான். இவ்வாறு என்னை நீர் அடையாமலிருக்கும் பக்ஷத்தில் நான் என் உயிரை விட்டுவிடுவேன் என்பது நிச்சயம். ஆகையால் எனக்கு நீர் உயிர்ப்பிச்சையைக்கொடுப்பதால் மகா பாருவே! மிகவும் மேலான தர்மத்தை நீர் செய்பவராவீர்" என்றிவ்வாறு அந்த உலூபி மன்றாடிக்கேட்டுக்கொள்ள அர்ஜுனன் அவளுடைய இச்சையின்படி அவளுடன் தங்கியிருந்து அவளுடைய இச்சையை பூர்த்திசெய்து மறுநாள் காலையிலேயே அவளை விட்டுச்சென்றானென்றும் அப்பொழுதுதான் இராவான் என்ற குமாரன் பிறந்தானென்றும் தெரியவருகிறது. இதை முற்றிலும் மறந்த அர்ஜுனன் தேவலோகத்தில் வாசம் செய்யும்பொழுது, இராவான் நேரில் அவனை சந்தித்து இந்த வரலாற்றை ஞாபகமூட்டி தான் அர்ஜுனனுடைய குமாரனென்று சொல்லிக்கொண்டதாய் தெரியவருகிறது. இதிஹாஸம் இவ்வாறிருக்க மனப்பூர்வமாய் காமவிகாரம் மேலிட்டு நடத்தப்படும் விதவா விவாஹத்திற்கு இது எவ்வாறு சாதகமோ தெரியவில்லை.

அர்ஜுனன் விதி பூர்வமாய் உலூபியை விவாகம் செய்துகொண்டான் என்பதற்கு என்ன ஆதாரமோ அதை இச்சபைதான் கண்டுபிடித்துச்சொல்லவேண்டும். ஆதிபர்வம் மகாபாரதத்தில் இதற்கடுத்த அத்தியாயத்திலேயே சித்ராங்கதையை அர்ஜுனன் விவாகம் செய்துகொண்டானென்று பல வகையாய் ஸ்பஷ்டமாய்ச் சொன்ன ஸ்ரீவேதவியாஸர் ஓரிடத்திலாவது அர்ஜுனன் உலூபியை விவாகம் செய்துகொண்டானென்று வியக்தமாய்ச் சொல்லவில்லை. உண்மையில் அர்ஜுனன் உலூபியை விவாகம்செய்துகொண்டிருந்தானல்லவோ வியாஸர் சொல்லியிருப்பர். சுவர்க்கத்தை அடைந்தவர்களில் தந்தை என்றும் தம்பி என்றும் மகனென்றும் பாராமல் எல்லோரிடமும் சென்று அவர்களை சந்தோஷப்படுத்துகிறவர்களாயுள்ள தேவதா அப்ஸரஸ்ஸுகளில் உத்தமியான ஊர்வசி மன்மதபாதை அடைந்து வெகுவாய் வேண்டியபோதிலும், தர்ம சூக்ஷ்மத்தை அறிந்துகொண்டு ஊர்வசி பௌரவ வம்சத்து மாதாவென்ற காரணத்தால் அவளை நிராகரித்து நபும்ஸகத்தன்மையை

மேல் என்று எண்ணின அர்ஜுனன் எல்லா ஸுகிர்தங்களையும் நாசமாக்கி நரகக்குழியில் தள்ளக்கூடிய விதவா விவாகத்தை நடத்தியே இருக்கமாட்டான் என்பது நிச்சயம். மேற்கண்ட சுலோகங்களுக்கு அடுத்த சுலோகத்திலேயே "ஏவ மேவ ஸமுத்பன்ன: பரக்ஷேத்ரே அர்ஜுனாத்மஜ:" இவ்வாறுதான் இந்த இராவானென்றவன் அன்னியனுடைய பாரியையிடத்தில் அர்ஜுனனுடைய பிள்ளையாய் பிறந்தவன் என்று சொல்லப்பட்டிருப்பதால் இராவான் பிறக்கும்பொழுது உலூபி அர்ஜுனனுடைய சொந்த க்ஷேத்திரமாக இல்லை என்று ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது. இதனால் இராவான் அர்ஜுனனுக்கு க்ஷேத்திராஜ குமாரனானவன், ஐராவதன் வம்சத்தில் பிறந்த கௌரவனென்ற ஸர்பத்தால் உலூபி அர்ஜுனனிடம் அனுப்பப்பட்டு இராவான் என்ற குமாரனை அடையப்பெற்றாள் என்று ஏற்படுகிறது. மேற்கண்ட வாக்யத்தில் காணப்படும் தத்தா என்னும் சப்தத்திற்கு நியுக்தா என்றுதான் அர்த்தம் செய்வது இந்த சந்தர்பத்திற்கு பொருத்தமானதாகும்.

(தொடரும்.)

---

## அப்பைய தீக்ஷதரின் அதிக்ஷேபணைகளுக்கு கண்டனம்.

---

(முன் 109ம் பக்கம் தொடர்ச்சி.)

ஆனால் அவர்கள் சொல்வதில் எது யுக்திக்கு அனுஸரித்திருக்கிறதோ அதை ஒப்புக்கொள்ளுகிறோம். "யுக்தி யுக்தம் வசோ க்ராஹ்யம் வசனம் பாலகாதபி அன்யத்து த்ருணவத்த்யாஜ்யம் அப்யுக்தம் பத்மஜன்மனா" அதாவது யுக்திக்கு ஒட்டிய வார்த்தையைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டியதவசியம். அது ஓர் குழந்தை சொன்ன வார்த்தையாயிருந்தாலும் இருக்கலாம். ஸாக்ஷாத் பிரம்மாவே அதற்கு மாறாக சொல்லியிருந்தாலும் அதை விட்டுவிடலாம் என்னும் நியாயத்தை நாம் அநுஸரித்திருக்கிறோம். ஆகவே வேதாந்தத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறபடி உபக்ரமம் உபஸம்ஹாரம் முதலிய லிங்கங்களுக்கு ஒத்ததாய் உபக்ரமத்தை விட உபஸம்ஹாரம் பிரபலம், அதைவிட அப்யாஸம் பிரபலம் என்று, அந்த வகை லிங்கங்களில் முதலாவதைவிட அதன்



அப்யாஸம் பிரபலம் அதைவிட அதற்கடுத்தது என்னும் கிரமத்தை நாம் ஒப்புக்கொண்டு, அதற்குமாறாக அவர்கள் சொல்வதை நாம் நிராகரித்திருக்கிறோம். ஸ்வதந்திரமான மதத்தை ப்ரவிருத்திக்கும் எங்களுக்கு இவ்வாறு எங்கள் மதத்திற்கு விரோதமானதை விட்டுவிடுவதை பூஷணமேயன்றி தோஷமாகாது. அது தூஷணமாயிருக்கும் பக்ஷத்தில் நியாய மதத்தையும் ஸாங்கிய மதத்தையும் நாம் விட்டவர்கள் என்று ஏன் தூஷணை சொல்லலாகாது. நாம் ஸமவாயத்தை ஒப்புக்கொள்ளவில்லை. பிரகிருதிக்கு ப்ராதான்யம் ஒப்புக்கொள்வதில்லை. அதனால் நாம் காணாத மதத்தையும் ஸாங்கிய மதத்தையும் விட்டவர்களாய் ஆகின்றோம். ஏன் அந்த வகையில் எங்கள்மீது தூஷணம் செய்யலாகாது? ஸ்வதந்திரமான மதத்தை ப்ரவிருத்திக்கும் எங்கள் வேதாந்திகளுக்கு சுவதந்திரமாய்ச் சொல்வதுவே பூஷணம்தான். இப்படியிருக்க எங்கள்மீது தூஷணை நீர் சுமத்துகிறீரே! நீர் தான் எல்லா வைதீக மதத்தார்களும் ஒப்புக்கொள்ளாதிருக்கும் ஆத்மைகத்வம் அகண்ட பிரம்மம் விச்வம் மித்யை முதலியவைகளை ஒப்புக்கொண்டு, சூன்யவாதிகளைத் தவிர்த்துள்ள இதர எல்லா மதத்தார்களின் மரியாதையை மீறியவராய் இருப்பதுடன் சூன்யவாதி மதத்தில் பிரவேசத்தையும் செய்திருக்கிறீரென்பதை ஏன் நீர் உணரவில்லை. "கல: ஸர்ஷபமாத்ராணி பரச்சித்ராணி பச்யதி। ஆத்மனோ ககனாபானி பச்யன்னபி ந பச்யதி॥" அயோக்யன் இதராளிடத்திலிருக்கும் தோஷத்தை ஓர் கடுகளவு இருந்தாலும் அதைப் பார்ப்பான். தன்னிடத்தில் ஆகாயமளவு பெரியதாயிருந்து வெளிப்படையாய் இருந்தபோதிலும் அதைப் பார்க்கமாட்டான் என்று சொல்வது சரி என்றே உங்கள் காரியத்தைப் பார்த்தால் சொல்லவேண்டியிருக்கிறது. மீமாம்ஸகர் நியாயங்கள் அனேகம் கண்டிக்கக்கூடியவைகளாயிருக்கின்றன. திருஷ்டாந்தம், ஜகத்திற்கு ஜன்மாதிகளை செய்பவரான ஈசுவரனுக்கு தேவதா சரீரம் முதலியவைகளிருப்பது பிரமாணச் சித்தமாயிருப்பினும் அது மீமாம்ஸகர்களின் மதத்தில் நிராகரிக்கப்படுகிறது. அப்படியானால் அவர்கள் வஜ்ஜிரஹஸ்த: புரந்தர: வஜ்ஜிராயுதத்தைக் கையில் கொண்டவன் இந்திரன் என்னும் வாக்யத்தை ஒப்புக்கொண்டு ஸ்வார்த்தத்தில் தாத்பரியமில்லை

என்று வழக்கப்படி அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியதாய்வருகிறது. இதனால் சுருதி அதத்வா வேதமென்றும் உண்மைக்கு மாறானதை அறிவிக்கிறதாயும் அவர்கள் சொல்வதாய் ஏற்படுகிறது. இம்மாதிரி அநேக ப்ரமேயங்கள் இந்த ஜைமனி மதத்தில் கண்டிக்கக்கூடியதாயிருக்கின்றன. இது சம்பந்தமாய் ஏராளமான திருஷ்டாந்தங்கள் மாத்வ கிரந்தங்களில் காட்டப்பட்டிருக்கின்றன. ஸாக்ஷாத் ஸ்ரீவேதவியாஸர் பிரம்ம மீமாம்ஸா சாஸ்திரத்தில் உபக்ரமம் முதலான லிங்கங்களைக்கொண்டு ஸமஸ்த வேதங்களும் பிரம்மபரமாய் அர்த்தம்செய்து தேவதா ஸ்வரூபத்தை ஸ்தாபித்திருக்கையில் அவருடைய ஸாக்ஷாத் சிஷ்யரான ஜைமனிரிஷி தம் குருவின் ஸித்தாந்தத்தை ஒப்புக்கொள்ளாமலிருப்பாரா என்பதை யோஜிக்க வேண்டும். மகாபாரதம் ஆரண்ய பர்வம் ஸாவித்திரி உபாக்யானத்தில் "அங்குஷ்ட மாத்திரம் புருஷம் நிசகர்ஷ பலாத்யம:" ஸத்யவானுடைய சரீரத்தினின்றும் யமன் ஓர் கட்டை விரலளவுள்ள ஜீவாத்மாவை பலாத்காரமாய் இழுத்தான் என்று சொல்லியிருப்பது தான் சொல்லும் ஜீவாத்மாவின் வ்யாபகத்தன்மைக்கு விரோதமாயிருக்கிறதென்று நினைத்து, மீமாம்ஸா கிரந்த கர்த்தாவான பட்ட குமாரிலர் இந்த வாக்யம் பிரமாணமல்லவென்றும் இது கேவலம் காவ்யசோபையான வாக்யமென்றும் சொல்லுகிறார். இவ்வாறு ஐந்தாவது வேதமாகிய மகாபாரதத்தின் வாக்யம் கேவலம் காவ்யசோபையான வாக்யமாயிருக்கும் பக்ஷத்தில் "ஜ்யோதிஷ்ட மேனஸ்வர்கோபவதி" ஜ்யோதிஷ்டோமத்தால் ஸ்வர்க்கம் வருகிறது என்று சொல்லும் வேதவாக்யமும் கேவலம் வேதசோபை என்று நாம் சொல்லவேண்டிவரும். ஓர் பிரமாண வாக்யம் காவ்யசோபை என்று சொல்லிவிட்டால் வேதசோபையாக மற்றொரு வேதவாக்யம் ஏன் ஆகக்கூடாது? ஆகவே "மீமாம்ஸகாஹி வாக்யார்த்த விசாரே ப்ரஸ்துதே ஸதி । லோக திருஷ்டே: ப்ரவிக்னந்தி விசன வ்யக்த பாம்ஸுபி:" மீமாம்ஸகர்கள் வாக்யார்த்த விசாரம் நடக்கையில் தங்கள் வாக்யங்களாகிய மண்ணைப்போட்டு ஜனங்களின் கண்ணைமூடி விடுவார்கள் என்று சொல்வது குறிப்பிடத்தகுந்ததாயிருக்கிறது. ஆகவே குருவான ஸ்ரீவேதவியாஸரின் மதத்திற்கு விரோதமாய் அவருடைய சிஷ்யரான ஜைமனி



ரிஷியின் மதம் இருக்காதுதான். ஆகையால் பாஷ்யகாரர் வார்த்திககாரர் முதலானவர்கள் தம்தம் புத்திப்போக்கை அனுஸரித்து மீமாம்ஸா ஸூத்ரங்களின் அர்த்தமாக சொல்லியிருப்பதில் யுக்திக்கு விருத்தமாயிருப்பதைத்தான் நாம் லக்ஷியம் செய்வதில்லை. ஆகையால்தான் கல்பங்களை இயற்றியிருப்பவர்களாயுள்ள மகரிஷிகள் மேற்கண்டவர்கள் சொன்னவைகளுக்கு விருத்தமாயுள்ள அநேக சாஸ்திரார்த்தங்களை கல்ப சூத்திரங்களில் சேர்ந்திருக்கின்றனர். அதனால் அவர்கள் மீமாம்ஸா நியாயத்தை அறிந்தவர்கள் அன்று என்று சொல்லிவிடுவதா? அவர்கள் ஸர்வக்ஞர்கள். மகாயோகீசுவரர்கள். மேலும் அவர்கள் எதைச் சொல்லியிருக்கின்றனரோ அதுவே மீமாம்ஸா நியாயமாகும். அதற்கு விருத்தமாக சமீபகாலத்தில் ஏற்பட்டவர்களான பாஷ்யகாரர்கள் வார்த்திககாரர்கள் முதலானவர்கள் சொன்னது அநியாயமென்றே கற்றோர்கள் நிச்சயிக்கவேண்டியதவசியம்.

இனி எமது ஆசாரியாள் சரியானதாய் இல்லாததான சப்தங்களை ப்ரயோகித்து கிரந்தங்களை எழுதியிருக்கிறாரென்று சொன்ன தூஷணையை விமரிசை செய்வோம். அவ்வாறு தூஷித்திருப்பதும் சரியான வியுத்பத்தி இல்லாமலிருப்பதால்தான் என்று சொல்லுவோம். சாஸ்திரங்களில் அந்த மாதிரி உபயோகப்படுத்துவது சரியே என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் வேதத்தில் மட்டில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் சப்தங்களை ப்ரயோகம் செய்தது அந்த வேதங்களின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக ஆதுமேயல்லாது லௌகிக சப்தங்களை அறியாமலிருப்பதாலோ அல்லது பிராந்தியாலோ அல்லது அப்பேர்ப்பட்ட சப்தம் அகப்படாமலோ உபயோகப்படுத்தப்பட்டிருப்பதாய் சொல்லக்கூடாது. ஸ்ரீ ஆசார்யாள் ஸர்வசப்தாஸ்ச விஷ்ணவிராமஸ்ஸகிருஷ்ணதனுவா ஸ்வபலாஜ்ஜிகாய என்று இவ்வாறு எல்லாம் தம் கிரந்தங்களில் உபயோகப்படுத்தியிருக்கிறாரென்றால் விஷ்ணு சப்தத்திற்கு ஸப்தமியேக வசனம் விஷ்ணௌ என்றும் தனு சப்தத்திற்கு த்ரிதீயா ஏகவசனம் தனுனா என்றும் அறியவில்லை என்று நிச்சயம் செய்துவிடுகிறது. இவர் அறியாதவர் என்றிருந்தால் எண்ணிறைந்த இடங்களில் அவ்வாறு எப்படி உபயோகித்திருக்கமுடியும்?

(தொடரும்.)

# சங்கரலீலா விலாஸம்.

(முன் 87-ம் பக்கம் தொடர்ச்சி).

மைசூர் மகாராஜா காலேஜ் லெச்சரர் ஸ்ரீமான் H. சுப்புராவ் M. A., எழுதுவதாவது:—

இந்த வஞ்சனைகளெல்லாம் விமரிசை செய்யும் பக்ஷத்தில் ஸ்ரீ ஹர்ஷகாரன் அனவஸ்தாதயோ தோஷா: ஸத்தா நிக்னந்தி வஸ்துன: அத்வைதினாம் தே ஸூஹ்ருத: ப்ரபஞ்சேதத் ப்ரஸஞ்ஜகா'' என்று பலவாறு சொன்ன விஷயங்களெல்லாம் சாமானியர்களை வஞ்சிக்கும்படியாய் இருக்கின்றனவேயன்றி வித்வத்சபையில் சொல்லக்கூடியதாக இல்லை. ஆத்மாச்ரயம் அன்யோன்யாச்ரயம் அனவஸ்தை முதலான தோஷங்கள் அத்வைதிகளுக்குப் பிரியமானவைகளென்றும் ஏனென்றால் இத்தியாதி தோஷங்கள் அவர்களின் வாக்கியயர்த்தத்தில் ஏற்பட்டால் ஜகத்தே பொய் என்று சித்தித்து விடுகிறதென்றும் இவ்வாறெல்லாம் ஸ்ரீ ஹர்ஷகாரரின் அபிப்பிராயம். இதும் ஓர் அபாண்டமான பொய். இவ்வாறெல்லாம் தோஷங்கள் ஏற்பட்டால் அத்வைதிகள் இந்த ஜகத் பொய் என்று சொல்லும் வாதம் பிசகு என்று ஏற்படுமேயல்லாது ஜகத் பொய் என்று ஏற்படாது, அவித்யை உண்டென்று சொல்லும் வாதம் அபிராமாணிகமாதலால் அதை விட்டுவிட வேண்டியதுதான். இதனால் ஜகத்பொய் என்ற வாதம் பிசகு என்று சித்திக்கிறது.

இவ்வாறு அநேக அப்பிராமாணிகமான ப்ரமேயங்களை ஒற்றுக்கொண்டு பொய்யானவைகளை மேலுக்குமேல் கல்பித்துக்கொண்டு, யுக்திக்கு விரோதமானவைகள்தான் தன்வாதத்திற்கு ஸ்வபாவம் என்றும் ஆத்மாச்சயம் முதலான தோஷங்கள் தனக்கு பூஷணமென்றும் அவர்தன் பூர்ண சம்மதத்தைக் கொடுத்திருப்பதைவிட இன்னும் ஞானமார்க்கத்தில் மேலான வஞ்சனை யாது உண்டு. இந்த அத்வைதிகளின் தத்துவம்தான் எல்லா ஹிந்துக்களின் தத்துவமென்று பிரமித்து ஆக்கலேயர்கள் அடிக்கடி கண்டனம் செய்திருக்கின்றனர். A. ஆர்சர் என்பவர் சொல்வதாவது:—

"Hindu philosophy is after all too human to be logical"—Archer. ஹிந்துமதம் (அத்வைத சித்தாந்தம்) அதிகமான மனுஷ்ய காரியங்களாயிருப்பதால் யுக்திகளை மீறியவைகளாயிருக்கின்றன. என்றால் தோஷமுள்ள மனுஷ்யர்களால் இயற்றப்பட்டதாயிருப்பதால்தான் சொந்த அபிப்பிராயமாக இருக்கிறதேயன்றி யுக்திகளைக்கொண்டு



The position of Maya and its denial, though a fact of positive experience, has in it a mysteriousness which defies intellectual assimilation. Indeed it is difficult to logically reconcile the claims of identity and causation. Mahendranath Sircar M. A., Ph. D.

வாசகர்களே! நாம் இந்த அத்வைதத்திலுள்ள முடிவான விஷயங்களைத்தான் யோசனை செய்யக்கூடும். தற்போது பிரசாரத்திலிருந்து வரும் அத்வைதமதத்தை இயற்றியவர்கள் கௌடபாதாசாரியாரும் சங்கராசாரியாருமானவர்கள். இந்த அத்வைதம் பல பெயர்கள் வாக்ப நடை முதலியவைகளால் மறைக்கப்பட்டிருக்கும் பௌத்தமதமே ஆகும். இதிலும் சங்கராசாரியாரின் சொற்கள் மிகவும் தணிச்சலானவைகள் என்பதில் சம்சயமே இல்லை. இவர் வெகுபால்யத்திலேயே அபரிமிதமான வேதாதிகளின் ஞானமுள்ளவராய் மனதில் தாரணம் செய்து கொள்ளும் உத்தமமான சக்தியடைந்தவராய் இனிய நடையில் நூல்களை இயற்றவும் சாமர்த்தியம் பெற்றார். ஆனால் பரம்பரையாய் உபதேசம் பெற்று வந்திருக்கும் நிஜதத்வத்தின் வாசனைகூட இவருடைய ஞானதிருஷ்டிக்கு வராமலிருந்ததால் இவர் கேவலம் தன் வித்யா ஸாமர்த்தியத்தால் மகத்தான வேதாந்த தத்வ நிர்மாணமாகிய பெரும் கட்டிடத்தைக் கட்டும் வேலையில் ப்ரவிருத்தித்தார். வேதவிதேவசாஹம் என்று ஸ்ரீகிருஷ்ணர் தன்னைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆகவே அவருடைய அனுக்ரஹத்தால் உண்மையான வேதார்த்தம் இதரர்களுக்கு ப்ரம்மாதிகளின் பரம்பரையார்களால் உபதேசம் பெற்று தெரியவரவேண்டும். பரம்பரையான உபதேசத்தால் ஸூக்ஷ்ம ரகஸ்யங்களை அறியாமலும் அல்லது பரோக்ஷமாகவாவது அறியாமலும், ஸூத்ர பாஷ்யாதிகளை இயற்ற ப்ரவேசிக்கும் பண்டிதன் அவன் எப்பேர்ப்பட்டவனாயினும் ஸூக்ஷ்மதத்வங்களைச் சொல்லும்பொழுது உண்மையை நிரூபிக்கவும் கஷ்டமான வேதவாக்யங்களின் நிஜமான தாத்பரியத்தை நிர்ணயம் செய்துகொடுக்கவும் முடியாமற்போய் தானும் மிகவும் துக்கப்பட்டு தன்னையும் தன்னை நம்பியிருக்கும் இதரர்களையும் பயங்கரமான ஆபத்தில் சிக்கவைப்பது நிச்சயமே ஆகும். தத்வோபதேசம் செய்வதென்பது ஸாமானிய சிறுகாரியமல்ல. பெரிய கட்டடம்கட்டும் வேலையைப்போல் மகத்தான காரியமாகும். மிக்க ஜவாப்தாரியான வேலையாகும். பரப்ரம்மத்தையும். பிரம்மாதி தேவதைகளையும், ஸ்வர்க்காதி பலன்களையும், யாகயக்ஞாதி கர்மங்களையும், ஜகத் ஸிருஷ்டி முதலான ப்ராம்மத்தின் மாகாத்மியங்களையும் விஷயங்களாகக்கொண்டதான

வேதார்த்தவிசாரமாகிய காரியம் பந்தாடுவதுபோல் அலக்ஷியமான காரியமன்று. முக்திக்குக் காரணமாய் க்ஞானத்தைத் தருவதாயுள்ள வேதாந்த சாஸ்திரநிர்ணயத்தில் ஒரு தத்வத்தை உண்மைக்கு மாறாய் நிருபணம் செய்துவிடும்பக்ஷத்தில் அந்த உபாஸனை நிஷ்பலமாய் ஆவதுடன் எதிரிடையான பலனைத் தருவதாயும் ஆகும். இதற்கு ஆயிரம் புஜங்களுள்ள கார்த்தவீர்யார்ஜுனன்தான் இந்த மகத்காரியத்தில் பிரவேசிக்கவேண்டும். ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷன்தான் இதன் நிர்ணயத்தை மனதில் சரியாக வாங்கிக்கொண்டு தன் நாவுகளால் உபதேசம் செய்யவேண்டும். இந்த திட்டங்களுக்கு மீறி ஸ்வதந்திரமாய் ஸஹாயம் செய்யும்பக்ஷத்தில் முடிவில் பலம் பயங்கரமே என்று ஸகல சாஸ்திரங்களும் சொல்லுகின்றன.

மேலும் த்வைதாத்வைத விசாரத்தில் த்வைதம் சரியோ அத்வைதம் சரியோ என்று அறியோம் என்று சந்தோஷப்படுகிறவர்களும்கூட இவ்வாறு சொல்லுகின்றனர். "த்வைத மதம் உண்மையாயிருக்கும்பக்ஷத்தில் நாம் அத்வைத உபாசனையைச்செய்தால் அந்த த்வைதமதத்தின்படி எங்களுக்கு கோரமான அந்தம்தமஸ்ஸுதான் வந்துசேரும். அத்வைதமதம் உண்மையாய் இருக்கும்பக்ஷத்தில் அந்த அத்வைத மதத்தின்படி த்வைத உபாஸனையால் எந்த அநர்த்தமும் ஏற்படுவதில்லை. ஆகையால் சந்தேகாவஸ்தையிலும்கூட த்வைதமதத்தின்படி அனுஷ்டானம் உசிதமாகும். ஆதலால் நாம் அவ்வாறே அனுஷ்டிக்கலாமே என்று எண்ணுகின்றனர். மேலும் நாம் அத்வைத மதத்திலுள்ள பெரும் தோஷங்களைக் காட்டியிருக்கிறோம். படித்தவர்கள் உண்மையையறிந்து அவர்களின் யோக்கியதைப்படி தம் தம் சம்மதமான மதத்தை பின்பற்றலாம். (தொடரும்.)

---

# நான்கு வர்ணத்தார்கள்.

மகாபாரதம் மோக்ஷதர்மத்தில் சொல்லப்படுவதாவது:—

பிருகுரிஷி சொல்லுகிறார்:—பிரும்ஹாவானவர், தம்முடைய தேஜஸ்ஸோடு கூடியவர்களும், ஸூர்யாக்னிகளுக்கு ஸமமான காந்தியுடையவர்களும், பிராம்ஹணர்களுமான மரீசி முதலானவர்களை முதலில் ஸ்ருஷ்டித்தார். பிறகு, ஸத்தியத்தையும், தர்மத்தையும், தபஸ்ஸையும், நித்தியமான வேதத்தையும், ஆசாரத்தையும், சௌசத்தையும், ஸ்வர்க்கத்துக்காக ஏற்படுத்தினார். தேவதைகள், தானவர்கள், கந்தவர்கள், ஸர்ப்பர்கள், யக்ஷர்கள்,



ராக்ஷஸர்கள், பிசாசர்கள், மனுஷ்யர்கள் இன்னும் பிராம்ஹணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்ற இந்த நான்கு வர்ணங்களைச் ஸ்ருஷ்டித்தார். பிராம்ஹணர்களுக்கு வெளுப்பு வர்ணமும் க்ஷத்திரியர்களுக்கு சிவப்பு வர்ணமும், வைசியர்களுக்கு மஞ்சள் வர்ணமும், சூத்திரர்களுக்குக் கருப்பு வர்ணமுமாம்.

பாரத்துவாஜர் கேட்கிறார்:- தேகத்தின் நிறத்தினால், வர்ணங்கள் பேதிக்கிற பக்ஷத்தில், நான்கு வர்ணத்தாருக்கும் தேக நிறமானது கலந்து இருக்கிறதே! காமம், குரோதம், லோபம், பயம், சோகம், சிந்தை, பசி, என்ற இவை, எல்லா வர்ணத்தாருக்கும் உண்டாகின்றனவே! அப்படி இருக்கும்பொழுது, வர்ணமானது, எதற்காக பேதிக்கிறது? வேர்வை, மூத்திரம், மலம், சிலேஷ்மம், பித்தம், ரத்தம், ஆகிய இவைகளை, எல்லோருடைய தேகமும் தரிக்கின்றனவே! தேகமானது, இவைகளை வளர்க்கின்றன, ஆனதனால், வர்ணமானது என் பேதிக்கின்றது? ஜங்கமங்கள், ஸ்தாவரங்கள் ஆகிய இவை, நானா நிறங்களோடு கூடியிருக்கின்றனவே? அதற்கு வர்ண நிச்சயம் எப்படி?

பிருகு ரிஷி சொல்லுகிறார்:—வர்ணங்களானவை, ஆரம்பகாலத்தில் பேதமில்லை. எல்லாம் பிராம்ஹண ஜாதியாகவே இருந்தன. பிறகு, கர்ம பேதங்களால், க்ஷத்திரியாதி வர்ணபேதத்தை அடைந்தன. கர்ம யோகத்தில் பிரீதியோடு கூடினவர்களாகவும், குரூரர்களாகவும், கோபிஷ்டர்களாகவும் ஸாகஸத்தோடு கூடினவர்களாகவும், ஸ்வதர்மத்தை விட்டவர்களாகவுமிருக்கிற பிராம்ஹணர்கள் சிவந்த நிறத்தோடு கூடினவர்களாய், க்ஷத்திரியர்களாய் விட்டார்கள். பசுக்களால் பிழைப்பை அடைந்தவர்களாகவும், கிருஷியினால் ஜீவிக்கிறவர்களாகவும், ஸ்வதர்மத்தை அனுஷ்டானம் செய்யாதவர்களாகவுமிருக்கிற பிராம்ஹணர்கள் மஞ்சல் நிறமடைந்து வைசியர்களாய் விட்டார்கள். ஹிம்ஸையிலும், பொய்யிலும் பிரீதியோடு கூடினவர்களாகவும், லோபிகளாகவும், ஸகல வேலைகளையும் செய்து ஜீவிக்கிறவர்களாகவும், ஆசாரத்தை விழுந்தவர்களாயுமிருக்கிற பிராம்ஹணர்கள் கருப்புவர்ணத்தோடு கூடின சூத்திரர்களாய் விட்டார்கள்.

இப்படி, தனித்தனி வேலைகளால் பிராம்ஹணர்கள் முதல் மூன்று வர்ணத்தார்களாய் விட்டார்கள். ஆனதால் மற்றை மூன்று வர்ணத்தாருக்கும் தர்மமும் யக்ஞ அநுஷ்டானமும் சாஸ்திரத்தில் வேண்டாம் என்று சொல்லவில்லை. வேதவாக்கியமானது, நாலு வர்ணத்தாருக்கும் பிரும்ஹாவினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. லோபத்தால் சூத்திரர்கள் மட்டும் வேதத்துக்கு அநதிகாரிகளாய் விட்டார்கள். பிராம்ஹணர்கள், தபஸ்ஸை கெடாததனால், வேதோக்த அநுஷ்டானத்திலிருக்கிறார்கள். விரத நியமாதிகளைச்செய்கிற பிராம்ஹணர்களுடைய, க்ஷேமத்துக்காக ஏற்பட்டிருக்கிற வேதத்தை அறியாதவர்கள், அப்பிராம்ஹணர்கள். பிசாசர்கள், ராக்ஷஸர்கள், பிரேதர்கள், இன்னும் நானாவகையான மிலேச்ச ஜாதிகள், இவர்களெல்லாம், க்ஞான விக்ஞானம் இல்லாதவர்கள், இஷ்டப்படி ஆசாரம், தொழில் இவற்றைச்செய்கிறவர்கள். பிராம்ஹண ஸம்ஸ்காரத்தோடு கூடினவர்களாகவும், ஸ்வகர்மத்தில் நிச்சயத்தோடு கூடினவர்களாகவுமுள்ள பிரஜைகள், ரிஷிகளாலே தபஸ்ஸின் சக்தியால் ஸிருஷ்டிக்கப்படுகிறார்கள். மற்றை ஜனங்களாலே ஸ்ருஷ்டிக்கப்படுகிறார்கள். ஆதி தேவனிடம் உண்டான சதுர்முகன் மூலமான ஸமான ஸ்ருஷ்டியை உனக்குச் சொல்லியிருக்கிறேன். இதுதான் தர்மத்தை ஆச்ரயிக்கும் வகை.

பரத்வாஜர் கேட்கிறார்:—எந்த வேலையினால் பிராம்ஹண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் என்கிற பெயருண்டாகின்றன? அதை எனக்குச் சொல்லும். பிருகு ரிஷி சொல்லுகிறார்:—ஜாதகர்மாதி ஸம்ஸ்காரங்களுடையவனும், வேதாத்தியயனமுடையவனும், ஸ்நான ஸந்தியா ஜப ஹோம தேவபூஜை, அதிதிபூஜை வைச்வதேவம் என்ற இந்த ஆறு கர்மத்தோடு கூடினவனும், சௌசாசாரத்தில் ஆஸக்தியுடையவனும், குருவிடத்தில் பிரீதியோடு கூடினவனும், ஸத்தியவாதியுமாயிருக்கிறவன் தான், பிராம்ஹணனென்று சொல்லப்படுவன். ஸத்தியம், தானம், அத்ரோகம் வெட்கம் தபஸு ஆகிய இவை எவனிடத்தில் இருக்கின்றனவோ அவன்தான் பிராம்ஹணனென்று சொல்லப்படுவான்.

க்ஷத்திரியகர்மத்தைச் செய்கிறவனாகவும் வேதாத்தியயனத்தைச் செய்கிறவனாகவும், கொடுப்பதிலும், வாங்குவதிலும் ஆஸக்தியுடையவனாகவுமிருப்பவன் க்ஷத்திரியன் என்றுசொல்லப்படுவன். வர்த்தக வியாபாரம், பசு ஸம்ரக்ஷணம், கிருஷி இவைகளில், ஆஸக்தியுடையவனாகவும், வேதாத்தியயன - யுக்தனாகவுமிருக்கிறவன் தான் வைசியனென்று சொல்லப்படுவன். எல்லாவற்றையும் புஜிப்பதில் ஆஸக்தியோடு கூடியவனாகவும், எல்லா வேலைகளையும் செய்கிறவனாகவும், அசுத்தனாகவும், வேதத்தைவிட்டவனாகவும், ஆசாரமில்லாதவனாகவும் இருக்கிறவன் தான், சூத்திரனென்று சொல்லப்படுவன். பிராம்ஹணனுக்குச் சொன்ன ஸத்தியம் முதலிய ஏழு அடையாளங்களும், சூத்திரனிடத்தில் இருந்து, பிராம்ஹணனிடத்தில் இல்லாத பக்ஷத்தில், அந்தச் சூத்திரன் சூத்திரன் அன்று, அவன் பிராம்ஹணன் தான். அந்த பிராம்ஹணன் பிராம்ஹணனன்று, அவன் சூத்திரன்தான்.

ஸகல உபாயங்களினாலும் லோபத்தையும், கோபத்தையும் அடக்கவேண்டியது. இதுதான் க்ஞானஸாதனங்களில் பவித்திரமானது. ச்ரேயஸ்ஸைக் கெடுக்கின்ற லோபக் குரோதங்களை, ஸர்வப் பிரகாரத்தாலும் தடுக்கவேண்டியது. நித்தியம், கோபத்திலிருந்து, ஸ்ரீயைக் காப்பாற்றவேண்டியது. மாத்ஸரியத்திலிருந்து தபஸ்ஸைக் காப்பாற்றவேண்டும். மான அபிமானங்களிலிருந்து, வித்தையைக் காப்பாற்ற வேண்டும். அஜாக்ரதையில்லாமல் தன்னைக் காப்பாற்றவேண்டும். பலனில் ஆசையில்லாமல், எல்லாக் காரியங்களையும் எவன் செய்வானோ, அக்னி ஹோத்திராதியின் பலம் ஸம்பூர்ணமாகும்படி எவன் செய்கிறானோ, அவன் தான் தியாகி. அவனே புத்திமான். ஹிம்ஸை செய்யாதவனாகவும், ஸகலப் பிராணிகளுக்கும் மித்திரனாகவும், அபிமானங்களை விட்டுப் புத்தியினால் ஜிதேந்திரியனாகவுமிருந்து, சோகமில்லாத ஸ்தானத்தைச் சம்பாதிக்கவேண்டியது.

மவுன யுக்தனாகவும், விஷயங்களில் ஆஸக்தியில்லாதவனாகவும், தபஸ்வியாகவும் இருக்கவேண்டியது. இந்திரியங்களுக்கு விஷயமான வஸ்துவுக்கு, 'வியக்தம்' என்று பெயர். இந்திரியங்களுக்கு எட்டாத வஸ்துவுக்குத் தான், 'அவ்வியக்தம்' என்று பெயர். அது, யுக்தியினால் அறியக்கூடியது. அவிச்வாஸம் இருந்தால், அந்த வஸ்துவை அடையமுடியாது. ஆனதனால், மனஸ்

ஸை, விச்வாஸத்தில் நிறுத்தவேண்டும். மனஸ்ஸைப் பிராணனில் அடக்கவேண்டியது. பிராணனைப் பிரம்ஹத்தினிடத்தில் செலுத்தவேண்டியது. வைராக்கியத்தால் மோக்ஷம் கிடைக்கும். மோக்ஷந்தான் முக்கிய ஸுகம். அதுதான் பிரம்ஹஸ்வரூபம் சவுசம் ஸாதாசாரம், தயை இவற்றோடு கூடினவனே வைராக்கியத்தினால் பிரம்ஹத்தை அடைவன். இதுதான் பிராம்ஹணர்களுடைய லக்ஷணம்.

## ஸ்ரீமுக்யப்ராணாந்தர்கத பகவானை உபாஸிப்பதேன்?

சாந்தோக்ய உபநிஷத்தில் முதலாவது அத்யாயத்தில் அத்யாத்மமாகிய தன் ஹ்ருதயத்திலுள்ள ஹ்ருத்கமலத்தில் ஸ்ரீமுக்யப்ராணரின் அதிஷ்டானத்திலிருக்கும் பிம்பரூபியான விஷ்ணு மூர்த்தியை தியானம் செய்யவேண்டுமென்று சொல்லி அதிதெய்வமாகிய ஸூரியனிடத்திலும் முக்யப்ராணரின் அதிஷ்டானத்திலிருக்கும் ஸ்ரீநாராயணரெனப்படும் ஸ்ரீவிஷ்ணுமூர்த்தியை தியானம் செய்யவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. அங்கு சொல்லப்படுவதாவது:—

ஸ்ரீமுக்யப்ராணர் ஸூரியாந்தர்கதராய் இருந்து உலகத்திற்கு வெய்யில் பிரகாசம், உதயம் அஸ்தமனம் முதலான காரியங்களைச் செய்கிறார். அக்னியின் காரியமாகிய சூடு ப்ரகாசம் முதலியவைகளுக்கு விறகு எப்படி அதிஷ்டானமோ அப்படித்தான் ஸூரியன் செய்யும் மேற்கண்ட ப்ரகாசம் உஷ்ணம் முதலானவைகளுக்கு முக்யப்ராணன் அதிஷ்டானமாவார். ஆகவே சூடு வெளிச்சம் முதலான சாமர்த்தியம் ஸூரியனைச் சேர்ந்ததல்லவென்று உபாஸனை செய்யும்பக்ஷத்தில் அவ்வாறு உபாஸனை செய்பவனுக்கு அக்ஞானம், பயம் முதலியவை நீங்கும். ஸூரியனுக்கு பிரதிதினமும் உதயம் அஸ்தமனம் உண்டு. ஆனால் அவருக்குள்ளே இருந்துவரும் முக்யப்ராணருக்கு இவை இல்லை. ஆயினும் முக்யப்ராணர் உதயம் முதலான காலங்களில் ப்ரஜைகளின் க்ஷேமார்த்தமாய் தன்னிடம் அந்தர்கதராயுள்ள ஜனார்த்தனனெனப்படும் விஷ்ணுமூர்த்தியை பஜனம் செய்துகொண்டு இருக்கிறார். ஸூரியமண்டலத்திலேயும், எல்லா ப்ராணிகளின் சரீரங்களிலேயும் இருக்கும் முக்யப்ராணர் ஒருவரே. அவர் இருந்துவரும் அந்தந்த அதிஷ்டான சரீரங்களின் யோக்யதைக்குத் தகுந்தபடி ஸூரியமண்டலத்திற்கும் சரிதான் இதர சரீரங்களுக்கும் சரிதான் உஷ்ணத்தை ஸமானமாய்ச் செய்திருக்கிறார்.



இவ்வாறு செய்யும் சாமர்த்தியத்தை ஸ்ரீஹரி அவருக்குக் கொடுத்திருக்கிறார். ஆகவே உபாஸனை செய்பவன் தன் சரீரத்திலோ அல்லது ஸூரியமண்டலத்திலோ இருந்துவரும் முக்யப்ராணரின் அதிஷ்டானத்திலுள்ள உத்கீதன் என்ற பெயர்கொண்ட விஷ்ணு மூர்த்தியை உபாஸித்தால் அவனுடைய யோக்யதைக்குத் தகுந்தபடி ஸமஸ்த அபீஷ்டங்களையும், மோக்ஷானந்தத்தையும் அடைவான். விஷ்ணு ஸ்வாதந்திரியம் படைத்தவராதலால் அவருக்கு ஸ்வ என்று பெயர். அவரை எப்பொழுதும் ரமணம் செய்வதால் அதாவது பஜனம் செய்வதால் முக்யப்ராணர் ஸ்வரன் எனப்படுகிறார். அவர் ஒவ்வொரு சரீரத்திலேயும் இருந்துகொண்டு ஸூரியாந்தர்கதராய் ஒவ்வொருவருக்கும் மாம்ப்ரதி மாம் பிரதி என்னும் ப்ரதீதிக்கு விஷயராய் இருப்பதால் ப்ரத்யஸ்வரன் என்று அவருக்கு நாமாந்தரமும் இருந்துவருகிறது. பஞ்சப்ராணங்கள் மூன்றுவகையார்கள் என்றும், ப்ராணவாயு முக்ய பஞ்சகர் என்றும், கருடபகவான் மத்ய பஞ்சகர் என்றும், ப்ரதான வாயுவின் குமாரர்களான இதர ப்ராணர்கள் அதம பஞ்சகர்களென்றும் சொல்லப்படுகிறார்கள். ப்ராணன், அபானன் இவர்கள் சேஷனும் கருடனுமாவார்கள். உதானன், ஸமானன் ருத்திரனும், இந்திரனும் ஆவார்கள். மேலும் இவர்களைவிட உத்தமர்கள். சிரேஷ்டராயிருப்பவர் வ்யானன் எனப்படும் ஸ்ரீமுக்யப்ராணர். அந்த வ்யானரெனப்படும் முக்யப்ராணரின் அதிஷ்டானத்தில் ஸர்வோத்தமனாயுள்ள உத்கீதனெனப்படும் ஸ்ரீஹரியை உபாஸிக்கவேண்டும். ப்ராணரெனப்படும் சேஷனிடமிருந்து சரீரத்தில் மேல் மூச்சியையும், அபானரென்னும் கருடனிடமிருந்து கீழ் மூச்சியையும் செய்து, வ்யானரெனப்படும் முக்யப்ராணர் சுயம் அந்த ப்ராணன் அபானன் இவர்களின் சந்தியை ப்ரவிருத்திப்பவராய் இருக்கிறார். இந்த வ்யானரென்னும் முக்யப்ராணரின் அதிஷ்டானத்தில் இருந்துவரும் விஷ்ணுதான் உத்கீதரெனப்படுகிறவராய் வாக்கு, ரிக்கு, ஸாமம் இவைகளை ப்ரவிருத்திப்பவராய் இருக்கிறார். அந்த பகவானின் பிரேரணையின்படி அவருக்கு அதிஷ்டானராயிருந்துவரும் முக்யப்ராணர் மேல்மூச்சு கீழ் மூச்சு இவைகளை அடக்கிவிடுவதால் பேசுதல் கடைதல் போர்புரிதல் முதலான பலமான காரியங்களைச் செய்யச் செய்கிறார். வ்யானர் முதலான பஞ்சப்ராணர்களிடமும்கூட உத்கீதரெனப்படும் பகவான் இருந்தபோதிலும் அவர் வ்யானரென்னும் பிராணரின் மூலமாகத்தான் வீரியமுள்ள காரியங்களைச்செய்கிறார். ஆகையால் வ்யானரென்னும் முக்யப்ராணரிடத்தில்தான் பகவானுடைய உபாஸனையை எப்பொழுதும் செய்யவேண்டும்

பகவான் ஸ்ரீஹரி எங்கும் வ்யாபித்திருந்தபோதிலும் அவர் ஒருவரே. அவருடைய மகிமை எப்பொழுதும் ஒரே வகையாயுள்ளது. அதில் ஏற்ற தாழ்வு என்பது இல்லை. ஆயினும் க்ரியா பேதத்தால் நாமம் ருபம் இவைகளின் பேதங்கள் இருந்துவருகின்றன. ஆனால் அவைகள் எல்லாம் ஸம்ச்லேஷம், விச்லேஷம் என்னும் ரீதியின்படி ஒன்றாகவே இருந்து பூர்ண ஐசுவரியங்களுடன் இருக்கின்றன. பரமாத்மா ஸர்வ சக்தி ஸம்பன்னராயிருப்பதால் விகாரமில்லாதவராய் ஸமஸ்த விசேஷ காரியங்களைச் செய்கிறார். உத்கீத மென்னும் மூன்று எழுத்துக்களில் ப்ராணர், ஸரஸ்வதி, சதுர்முகன், இவர்களின் அதிஷ்டானங்களில் ஸ்ரீஹரியை உபாஸிப்பவர்கள் வேதாந்தமாயுள்ள ஐஹிக ஆமுஷ்மிக பலன்களை அடைவார்கள். மேலே சொன்னபடி சூரியாந்தர்கதராயுள்ள முக்யப்ராணரிடம் அந்தர்கதராகயிருந்துவரும் விஷ்ணுதான் ஸர்வோத்தம னென்று ஞானம் பெற்று அவரை நிஷ்காம உத்கீதத்தால் ஸ்தோத்திரம் செய்தால் ஸர்வ ஸம்பத்ஸமிருத்தியையும் அடைவார்கள்.

---

## விசேஷ தினங்கள்.

### மார்கசீர்ஷமாஸம்

| | | |
|---|---|---|
| 1—12—35 | பானுவாரம் | ச்ரவணம் உப, விஷ்ணுப, உப. |
| 6—12—35 | சுக்ரவாரம் | ஏகாதசி, உப. |
| 10—12—35 | மங்களவாரம் | பௌர்ணமி, விஷ்ணுப, உப. இல்லை. |
| 16—12—35 | சோமவாரம் | தனுர்மாஸம், முதற் பூஜை. |
| 21—12—35 | சனிவாரம் | ஏகாதசி, உப. |
| 25—12—35 | புதவாரம் | தர்சம், விஷ்ணுப, உப. |

208733


# மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரியமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வ வகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாராய்ச் சேருங்கள். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருட ஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வால்யங்கள் விலைக்குக் கிடைக்கும். பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,
ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

---

## மாத்வமித்திரன் பழைய வால்யங்கள் வெகு சொற்பம்தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.

வருட சந்தா ரூ. 3 Regd. No. M. 2419.


# டி. எஸ். ஆர்.

## அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

| | |
|---|---|
| ஸ்தாபிதம் | தந்திவிலாஸம் |
| 1909 | "கோகுல்" |

எங்கள் வாஸனாதிரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்கு தயாராக
இருக்கும் ஸாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கரி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னோப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித்தைலம்,

அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.


Printed at Sri Venkateswar Power Printing Works and
Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam